204 …o. M. 2797. 204 (விலை அணா ஒன்று.)




# VARTHAGA OOLIAN.

Trichinopoly. | Monthly Journal of Commerce, Trade and Industry. | January 1934

மலர் 2.] திருச்சினாப்பள்ளி ஜனவரிமீ - 1934 [இதழ் 19

"வர்த்தக ஊழியன்" வருட சந்தா.

உள்நாட்டிற்கு ரூ. 1. வெளி நாட்டிற்கு ரூ. 1—8—0

விளம்பர விகிதம்.

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 0—8—0.
பக்கம் ஒன்றுக்கு ரூ. 10—0—0.

முன்பணமில்லாத விளம்பரங்கள் பிரசுரிக்க முடியாது. நீடித்தகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை.

| | |
|---|---|
| நெல் விளைவு ... | 169 |
| வர்த்தக சங்கங்கள் ... | 170 |
| சிறுமணிதிரள் ... | 171 |
| சாமான்களுக்கு ரயில்வே சார்ஜ்கள் ... | 172 |
| Mysore Mines ... | 173 |
| Hosiery Trade ... | 174 |
| Trade Secrets ... | 175 |
| ராஜம் (கதை) ... | 176 |
| வைசிராய் அபிப்பிராயம் ... | 178 |
| மதிப்புரைகள் ... | 179 |
| புதிய தீர்வை ... | 180 |
| வர்த்தக குறி வழக்கு ... | 181 |
| தமிழ் அன்பர் மகாநாடு ... | 182 |
| நாணய மாற்றம் ... | 183 |
| இந்திய வர்த்தகம் ... | 184 |
| வர்த்தக துணுக்குகள் ... | 185 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 APR 1934
MADRAS.

"VARTHAGA OOLIAN"

Annual Subscription.

Inland Rs. 1—0—0. Foreign Rs. 1—8—0.

Advertisement Tariff.

One inch Rs. 0—8—0. One Page Rs. 10—0—0

Per Insertion.

Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.

HULLO! HULLO!!
HOW IS YOUR BUSINESS?
DON'T BE BROKEN HEARTED.
BROAD CAST YOUR BUSINESS.
MESSAGES THROUGH
"VARTHAGA OOLIAN"
AND PROSPER IN TRADE
*Apply to:—*
*Manager, "Varthaga Oolian"*
*TRICHINOPOLY, SOUTH INDIA.*

# T.R. ரெங்கசாமிநாயுடு

**வர்ணம் & கண்ணாடி வியாபாரம்,**

341, 42, பெரியகடைவீதி, திருச்சினுப்பள்ளி.

எம்மிடம் பிரசித்திபெற்ற கம்பெனிகளின் நேர்த்தியான வார்னீஷ் வர்ணங்கள், முகம் பார்க்கும் நிலைக்கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகள், கலர் கண்ணாடிகள்.

ராஜா ரவிவர்மாவின் அழகிய சித்திரப்படங்கள், ஜெர்மன் & இங்கிலீஷ் லேடி & சீனரி படங்கள், போஸ்டு கார்டு படங்கள், படங்களுக்கு வேண்டிய சட்டம் கண்ணாடிகள் கால் அங்குல வெளிச்ச கண்ணாடிகள் அட்டை, டின் பிளேட் வகைகள்.

திருவிழாக்களுக்கு வேண்டிய கலர் காகிதங்கள், வர்த்தி தகடுகள், கண்ணாடி மணி தினுசுகள், அசல் தங்கம் & வெள்ளி ரேக்குகள் முதலியவைகள் விலை சரசமாயும் நயமானதாயும் கிடைக்கும்.

**ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.**

புதுவருட காலண்டர்கள் விற்பனைக்கு கிடைக்கும்.



இனும்! இனும்!!

# என் அனுபவசாஸ்திரீய

## தேகாப்பியாச முறை

இது எல்லோருக்கும் இனமாக அளிக்கப்படும்.



இப்புத்தகத்தில் தேகாப்பியாச முறையைப்பற்றி நன்ருக விவரித்து எழுதப்பட்டிருக்கின்றது. இது தவிர என்னுடையதும் மற்றும் என்னுடைய சிஷ்யர்களுடையதுமான அநேக புகைப்படங்கள் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கின்றன. எவன் தன் தேகத்தை அபிவிருத்தி செய்து ஆரோக்கியமாக இருக்க விரும்புகிருனே அவன் இப்புத்தகத்தை வாசிக்க வேண்டும்.

தபால் சார்ஜுக்காக இரண்டு அணு இந்திய போஸ்டல் ஸ்டாம்பு அனுப்பவும்.

பிரபோசர்: **எம். வி. கிருஷ்ண ராவ்,**

உதகமண்டலம், (நீலகிரி.)

## GREETINGS.

*To all our readers and our advertisers, our best wishes for a happy New Year.*

"நாணயம் நனி பேண்"

"வர்த்தக ஊழியன்"

திருச்சிராப்பள்ளி
1934-ஹு ஜனவரி-மீ

## நெல் விளைவு.

(Paddy Production)

இந்தியாவில் பெரும்பான்மையோர் வேளாண்மை தொழில் செய்பவர்கள். ஏராளமான நிலங்கள் உழுது சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. முக்கியமாய் நெல் விளைவுக்குத்தான் அதிகமாக சலுகை காட்டப்படுகிறது. வேறு பல தான்யங்கள் முதலானவைகளினால் அதிகமான லாபத்தை எதிர்பார்க்கலாமென்று பல மகாநாடுகள் மூலமாகவும், காட்சிகள் மூலமாகவும் எடுத்துச்சொல்லியும், நெல்சாகுபடியில் சிரத்தை அதிகம் செலுத்தி வருவதை நாமெல்லோரும் நன்கு அறிவோம். சில வருடங்களாக நெல் விலை அதிகமாகிக்கொண்டே வந்து, சமீபத்தில் திடீரென விலை குறைந்து போகவே, மிராசுதாரர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டதுமன்றி, நெல் வர்த்தகம் முன்னிருந்தது போல செழித்தோங்கவில்லை. நெல் விலை குறைந்து விட்டதென்று கவர்ன்மேண்டுக்கு தெரிவித்துக் கொண்டதின்மேல் சென்ற ஆண்டில் ரூபாய்க்கு இரண்டணா வீதம் சென்னை கவர்ன்மேண்டார் கிஸ்தியில் தள்ளி வசூல் செய்தார்கள். இவ்வாண்டும் அதே விலையிருந்து வருவதாலும், எங்கு பார்த்தாலும், மழையினாலும், புயலினாலும் அதிகமான சேதம் ஏற்பட்டிருப்பதினால் 100க்கு 50 வீதம் தள்ளிக்கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மேண்டாரை கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். திருச்சி ஜில்லாவில் சமீபத்தில் நடைபெற்ற திருச்சி ஜில்லா விவசாயிகள் மகாநாட்டில் 100க்கு 25 வீதம் கிஸ்தியில் தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டது. ஆனால் அதே ஜில்லாவில் தனிப்பட்ட மிராசுதாரர்கள் சங்கங்களும், கூட்டங்களும், தாலூக்கா போர்டுகளும் 100க்கு 50 வீதம் தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றன.

மேலும் நெல் அதிகமாக விளையக்கூடிய மாகாணங்கள் வங்காளம், சென்னை, பர்மா, பீகார், ஒரிஸ்ஸா. 1932-33ம் வருடத்தில் 82,000,000 ஏக்கர் நிலங்களில் நெல் சாகுபடி செய்யப்பட்டன. அவைகளில் சென்னை மாகாணத்தில் 11,500,000 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றது. 1933-34ம் வருஷத்தில் ஏப்ரல் மாதத்திலிருந்து நவம்பர் மாதம் 25உ வரையில் 10,491,000 ஏக்கர் நிலங்கள் தான் சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றன. 1932-33ம் வருடத்தில் இந்தியாவில் 33,600,000 டன் நெல் விளைந்திருக்கிறது சென்னை மாகாணத்தில் மட்டும் 5,230,000 டன், 1931-32, 1930-31 ஆண்டுகளில் 5,300,000, 5,40,000 டன்களும் ஆகும். சென்னை மாகாணத்தில் ஒரு ஏக்கருக்கு சராசரி 1932-33ம் வருடத்தில் 1,055 பவுன் வீதமும், 31-32ல் 1015 வீதமும், 30-31ல் 1031 வீதமும் விளைந்திருக்கிறது. இதிலிருந்து விளைச்சலில் யாதொரு குறைவுமில்லையென்று தெரிகிறது. அரிசி ஏற்றுமதியில் தான் வர்த்தக மந்தம் ஏற்பட்டிருக்கிறது. மகாயுத்தம் நடைபெற்றதற்கு முன் வருடாவருடம் சராசரி 2,398,000 டன்னும், மகாயுத்தம் நடந்துகொண்டிருக்கையில் 1,685,000 டன்னும் மகாயுத்தத்திற்கு பின் 1,462,000 டன்னும் 1929, 30, 31, 32, 33 வருடங்களில் 1,765,000; 2,298,000; 2,254,000; 2,301,000; 1,828,000; டன்னும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. இதன் விலை 30, 31, 32, 33ம் வருடங்களில் ரு. 31,28,00,000; 25,82,00,000; 17,84,00,000; 14,23,00,000. 1933-34ம் வருடத்தில் ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையில் ஏற்றுமதி 11,35,000 டன், இதன் விலை ரு. 6,87,000 1932-33ம் வருடத்தில் 35,510 டன் இண்டோசைனா, ஸ்டேரியிட் செட்டில்மேண்டு தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. 1932-ம் வருடம் அக்டோபர் மாதத்தில் 72,000 டன் 60 லட்ச ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டன ஆனால் 1933-ம் வருடம் அக்டோபர் மாதத்தில் 91000 டன் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தாலும் 56 லட்ச ரூபாய்க்கு தான் விற்கப்பட்டிருக்கின்றன. இதே காலத்தில் ஒரு லட்ச ரூபாய் விலையுள்ள 1300 டனிலிருந்து நான்கு லட்ச ரூபாய் விலையுள்ள 6500 டன் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

இம்மாதிரியான நிலைமையில் இனிமேலும் இல்லாமலிருக்கும்படியாகவும் இந்திய அரிசிக்கு போதுமான ஆதரவு வெளிநாடுகளில் தேட வேண்டுமென்றும் மாகாண சட்டசபைகளிலும், இந்தியா சட்டசபையிலும் அடிக்கடி பேசப்பட்டு வருகின்றன. இந்தியா சட்டசபைக்கு நெல் விளையும்

மாகாணங்களிலிருந்து வந்திருக்கும் அங்கத்தினர் களெல்லாம் சேர்ந்து கவர்ன்மெண்டு வர்த்தக மெம்பருடன் கலந்து பேசியிருப்பதாயும், இன்னும் யாதொரு வித மான முடிவுக்கு வரவில்லை யென்றும் தெரிகிறது. நான்கு வருடங்களுக்கு முன் கல்கத்தாவில் ரு. 6 4 0 விற்றது இப்பொழுது ரு. 3 13 0 சென்னையில் ரு. 6 5 0 விற்றது இப்பொழுது ரு. 3 2 0 கவர்ன்மெண்டார் எவ்விதமான சௌகரியங்கள் செய்தால் அரிசி ஏற்றுமதிக்கு சாதகமாகயிருக்குமென்று கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். சென்னை மாகாணத்தில் அரிசி ஏற்றுமதிக்கு சாதகமாக ரயில்வே கட்டணங்களை குறைத்துக்கொடுக்க வேண்டுமென்று ரயில்வே கட்டண கமிட்டிமுன் தஞ்சை தென்னுற்காடு ஜில்லா மில் முதலாளிகள் சங்கம் எடுத்துக்காட்டியிருக்கின்றது. ஸ்ரீரங்கத்தில் சமீபத்தில் நடைபெற்ற விவசாயிகள் மகாநாட்டு காட்சியை திறந்து வைத்த அபிவிருத்தி இலாக்கா மந்திரி கனம் திரு. பி. டி. ராஜன் அவர்கள் அரிசிக்கு தென்னிந்திய ரயில்வே கம்பெனியார் கட்டணங்களை குறைத்திருக்கின்றார் களென்றும் அதனுல் போதிய சௌகரியம் ஏற்படவில்லையென்றும் சொல்லியிருக்கின்றார். அரிசி ஏற்றுமதி சம்மந்தமாக ஒரு ஸ்பெஷல் ஆபீசர் நியமித்து பரிசீலனை செய்யப்போவதாயும் சொல்லப்பட்டது. எவ்விதமாக யிருந்தபோதிலும் எவ்வளவு சௌகரியங்கள் கவர்ன்மெண்டார் செய்து கொடுக்க முயற்சி எடுத்துக்கொண்டாலும் பர்மாவிலிருக்கும் நெல் பயிரிடுபவர்கள் கேட்டுக்கொண்டதுபோல் விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு கிஸ்தி வசூல் செய்ய வேண்டும், ஏற்றுமதி வரியை குறைக்கவேண்டும், இந்தியாவும் இலங்கையும் கூலிகள் மூலமாக பிணைத்துக் கொண்டிருப்பதால் இலங்கை இந்திய அரிசியை வாங்கும்படி வற்புறுத்த வேண்டும், மற்ற தேசங்களிலிருந்து இந்தியாவுக்குள் அரிசி இறக்குமதியாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது சர்க்காரின் முக்கிய கடமையாகும்.

## வர்த்தக சங்கங்கள்
## Chamber of Commerce.

### திருச்சினுப்பள்ளி.

திருச்சி ஜில்லா தமிழ் வியாபாரிகள் சங்கத்து கூட்டம் டிசம்பர் மாதம் 22உ பிரசிடெண்டு திரு. பெ. அந்தோணியா பிள்ளை தலைமையில் நடை பெற்றது. அச்சமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

(1) தென்னிந்திய ரயில்வேயில் வாகன் ஒன்றுக்கு 81 மணங்கு வீதம் வாழைக்காய் ஏற்றவேண்டுமென்று புதிதாக உத்திரவிட்டிருப்பது வர்த்தகர்களுக்கு தற்சமயம் வர்த்தகம் மந்தமாகயிருப்பதினுல் அவ்விதம் அனுப்பமுடியாதென்று தெரிவித்துக்கொள்வதுடன் முன் அமுலிலிருந்ததுபோல் வாகன் ஒன்றுக்கு 54 மணங்கு வீதம் அனுப்பும்படி உத்திரவிடும்படியாக ரயில்வே ஏஜண்டை கேட்டுக்கொள்ளுகிறது.

(2) தென்னிந்திய ரயில்வேயில் நீலகிரி ஸ்டேஷன்களிலிருந்து திருச்சினுப்பள்ளிக்கு அனுப்பப்படும் அழுகிப்போகும்காய்கறிகள், உருளைகிழங்கு பழம்முதலானவைகளுக்கு சமீபத்தில் ஏற்படுத்தியிருக்கும் ரயில்வே கட்டணங்களைப்போல் மேட்டுப்பாளையம் ஸ்டேஷனிலிருந்து அனுப்பப்படும் மேற்கண்ட சாமான்களுக்கும் குறைந்த கட்டணம் ஏற்படுத்தும்படியாக ஏஜண்டை கேட்டுக்கொள்ளுகிறது.

(3) தற்சமயம் வர்த்தகம் மந்தமாகயிருப்பதினுல் பெரிய மார்க்கட்டில் கடைகள் வைத்து வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்களுக்கு கடை வாடகையை நான்கு அணு வீதம் குறைத்து வசூல் செய்ய வேண்டும்படி முனிசிபால் சேர்மனை கேட்டுக்கொள்ளுகிறது:

(4) பெரிய மார்க்கட்டை சிலவருடங்களாக கண்டிராக்ட் விடாமல் நடத்திக் கொண்டுவந்ததினுல் வர்த்தகர்களுக்கு சௌகரியம் ஏற்பட்டிருப்பதும், முனிசிபாலிட்டியின் மேல் பார்வையில் நடத்தி வருவதினுல் யாதொரு கஷ்டமும் ஏற்படாமலிருப்பதினுல் கண்டிராக்டை புதுவருடத்திற்கு விடாமல் நேரிலேயே வசூல் செய்யும்படி சேர்மனை மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறது.

### தூத்துக்குடி.

டிசம்பர், 18—தேதி மாலை 5-30 மணிக்கு தூத்துக்குடி இந்திய வர்த்தக சங்கக் காரியாலயத்தில் நகரசபை சேர்மன் திரு. ஜே. எல். பி. ரோச் விக்டோரியா தலைமையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில், திரு. பி. எஸ். சுப்பராமன் 1933ம் வருஷத்து ரிசர்வ் பாங்கி மசோதாவைப்பற்றி ஒரு அரும்சொற்பொழிவு நிகழ்த்தியதின் சுருக்கமாவது:—

நம் தேசத்தில் நாணய செலாவணியைப்பற்றியும், நாணயமாற்று விகிதத்தைப்பற்றியும், சிறிதுகாலமாக, தீவிர வாதம் நடந்து வருகின்றது ரூபாயின் மதிப்பைக் குறைத்தால்தான், இந்திய வியாபாரத்திற்கும் விவசாயிகளுக்கும், நன்மையளிக்கும் என்பது உசிதமே. அப்பொழுதுதான் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி வியாபாரம் அதிகமாகும். தற்பொழுதுள்ள நாணயமாற்று, பொது ஜனங்களின் நன்மைக்கு தீங்கு விளைவிப்பதோடு, நூதனமாக சிருஷ்டிக்கப்படும், ராஜாங்கத்திற்கும் இடையூறாக இருக்கும். ரூபாயின் மதிப்புக் குறைப்பது அத்தியாவசியம்:—கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் அவர்களின் நாணயங்களின் மதிப்பைக் குறைத்து, அதன் மூலம் வெளிநாட்டு ஏற்றுமதி வியாபாரத்தை அதிகப்படுத்தி இருப்பதுபோல், இந்தியாவும் அம்மாதிரி திரவிய நிலைமையை ஏன் உயர்த்திக் கொள்ளக்கூடாது.

இறுதியாக திரு. வி. வி. தனுஷ்கோடி நாடார் கீழேகண்ட தீர்மானத்தை பிரரேபிக்க ஏகமனதாய் நிறைவேறிற்று:- இக்கூட்டத்தில் பொது ஜன நன்மையைக் கருதி ரூபாயின் விகிதத்தை 16 பென்சாக மாற்றும்படி இக்கூட்டம் ஏகோபித்து தீர்மானித்திருப்பதோடு, இக்கூட்டத்தின் தலைவர், ஷ்டி தீர்மான நகலை இந்திய கரன்ஸி லீக் பம்பாய் காரியதரிசிக்கும், சென்னை தென்னிந்திய வர்த்தக சங்க காரியதரிசிக்கும், அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சங்க காரியதரிசி திரு. ஏ. ஆர். ஏ எஸ் துரைசாமி நாயர், தலைவருக்கும், உபந்யாசகருக்கும், வந்தன வாழ்த்துக்கள் கூறியதும் கூட்டம் கலைந்தது.

அமெரிக்காவில் டிசம்பர் மாதம் 18உ வரையில் 15,682,000 டாலர் மதிப்புள்ள 469491 அவுன்சு தங்கம் வாங்கப்பட்டிருக்கிறது.

* * *

# சிறுமணித்திரள்.

## Editorial Notes.

### வித்யாசம் காட்டுவோம்.

ரிசர்வ் பாங்கு சம்மந்தமாக நமது அபிப்பிராயத்தை வெளியிட்டபொழுது பாங்கியில் பங்கெடுத்துக்கொள்ளும் எல்லா பங்குதாரர்களுக்கும் வித்யாசமில்லாமல் வோட் சுதந்தரம் அளிக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருந்ததை அனுசரித்து இந்திய சட்ட சபையில் ரிசர்வ் பாங்கு பிரிவுகள் பரிசீலனை செய்துகொண்டிருக்கையில் டாக்டர் ஜியாவுடீன் ஆமத் என்ற அங்கத்தினர் நம்முடைய அபிப்பிராயத்தை தழுவி திருத்தப்பிரேரபணை கொண்டுவந்தார். இதை ஆதரித்து திருவாளர்கள் கே. பி. தம்பான், என்.எம். ஜோஷி, பூபத் சிங், யாதவ் முதலானவர்கள் பேசினார்கள். கவர்ன்மெண்டு மெம்பர் இதை எதிர்த்து பேசினார். கடைசியில் வோட் எடுத்ததில் 28-அங்கத்தினர்கள் சாதகமாகவும், 55 அங்கத்தினர்கள் விரோதமாகவும் வோட் கொடுக்க தோல்வியுற்றது. 28-அங்கத்தினர்கள் சாதகமாகயிருந்ததற்காக பாராட்டுவதுடன் ஒவ்வொருவருக்கும் ராஜீய சம்மந்தமான சட்டசபை தேர்தலில் வோட் சுதந்தரம் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கும் இக்காலத்தில் 55-பேர் விரோதமாக வோட் கொடுத்ததற்காக வருந்தவேண்டிய நிலைமையிலிருக்கிறோம்.

### பரிதாபம்! பரிதாபம்!!

பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்ற பழமொழியை அனுசரித்து சில ஆண்டுகளுக்குமுன் வெள்ளத்தினால் சேதமடைந்த தென் ஆற்காடு ஜில்லாவில் சென்றமாதத்தில் புயல்காற்று அடித்து குறிப்பாக கூடலூருக்கும் கும்பகோணத்திற்கும் இடையேஏற்பட்ட உயிர், பொருள் சேதங்களைக் கேழ்க்க மனம் திடுக்கிடுகின்றது. விளை பொருள்களின் சேதத்தினால் பொது ஜனங்களுக்கும் வர்த்தகர்களுக்கும்ஏராளமான நஷ்ட மேற்படுவது திண்ணம். திருச்சி ஜில்லாவில் ஏராளமான வாழைமரங்கள் சேதமடைந்ததாயும் அதனால் வாழைப்பழம் முதலானவைகளின் வர்த்தகத்துக்கு கிராக்கி ஏற்படுமென்றும், சேதத்தினால் மிராசுதாரர்களுக்கு அதிக நஷ்ட மேற்பட்டிருக்கிறதென்றும் தெரிகிறது. கவர்ன்மெண்டாருக்கு நிலவரியை வஜாசெய்யசந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறதென்பதையும் ஞாபக மூட்டுகிறோம்.

### விமோசனமில்லை.

இந்திய சட்ட சபையில் ரிசர்வ் பாங்கு மசோதா பரிசீலனைசெய்துகொண்டிருக்கையில் நாணய மாற்றம் சம்மந்தமாக பரிவர்த்தனை விகிதம் 16-பென்சாக விருக்கவேண்டுமென்று திரு. நரசிம்ம ராஜு திருத்தப் பிரேரபணை கொண்டுவந்தார். கவர்ன்மெண்ட் தரப்பில், பொக்கிஷ இலாகாவுக்கு வந்த 59-மகஜரில் 2-தான் 16 பென்சு விகிதத்தை அங்கீகரித்து எழுதியிருந்தன வென்றும், ஒரு மகஜரில் 12-பென்சாக விருக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்ததென்றும், பதில் சொன்னார்கள். பரிவர்த்தனையை 16 பென்சாகவே யிருக்கவேண்டுமென்று மாகாண பரிவர்த்தனை சங்கங்களும், வர்த்தக சங்கங்களும், தீர்மானங்கள் நிறைவேற்றி கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருந்தும் கவர்ன்மெண்டாரிடம் 2-தான் 16 பென்சுக்கு சாதகமாக கிடைத்ததாம். மேலும் திரு. ராஜு அவர்களின் தீர்மானத்திற்கு 47-பேர் சாதகமாகவும் 57-பேர் பாதகமாகவும் வோட் கொடுத்ததின்மேல் தீர்மானம் தோல்வியடைந்தது. இவ்விஷயத்தை கேழ்க்க மிகுந்த வருத்தமேற்படுகிறது. சென்னையில் கூடிய மிதவாதிகள் மகாநாட்டிலும் ஆதரித்து தீர்மானம் செய்யப்பட்டிருப்பதையும் ஞாபகப் படுத்துகிறோம்.

### பாம்பு தோலுக்கு கிராக்கி.

பாம்பு, முதலை, உடும்புமுதலான ஊர்வன விஷஜந்துக்களின் தோல்களினால் செருப்பு, கைப்பெட்டி முதலான சாமான்கள் செய்யப்பட்டு வருகின்றபடியினால் இந்த தோல்களுக்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆறு வருடங்களாக இங்கிலாந்துக்கு இத்தோல்கள் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டன. இந்தியாவிலிருந்துமட்டும் சென்ற வருடம் 25-லட்சத்துக்கு இறக்குமதி செய்யப்பட்டதாம். இதன் காரணமாக இந்தியாவிலிருக்கும் விஷ ஜந்துக்கள் அனேகமாக மாண்டுபோக நேரிடும். ஒரு விஷயத்தில் நன்மையே.

### தமிழ் அன்பர் மகாநாடு.

சென்னையில் நடைபெற்ற தமிழ் அன்பர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் தமிழ் அபிவிருத்தியைப்பற்றியே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தீர்மானங்கள் காகிதத்துடன் நின்றுபோகாமல் காரியத்திலும் நடைபெறும்படியாக மகா நாட்டைக் கூட்டியவர்கள் சிரத்தை யெடுத்துக்கொள்வார்களென்று நம்புகிறோம். நவம்பர் மாத இதழில் சுட்டிக் காட்டியது போல ஆங்கிலச் சொற்கள் பல தமிழ் சொற்களாகவே வழங்கிவருவதால் அவைகளையும் தமிழ் சொற்களாகவே ஏற்றுக்கொள்ளவேண்டியதேயன்றி அச் சொற்களுக்கு சரியான தமிழ் பதங்கள் தேடுவதினால் பிரயோஜனம் ஏற்படாதென்றும், முயற்சியும் பயனடையாதென்றும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## சாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள். (RAILWAY RATES)

(The Railway do not accept responsibility for the correctness of these quotations a reference should be made to the Local Rate Advices & Foreign Rate Circulars issued by the S. I. Ry.)

| சாமான்கள் | எங்கிருந்து | எந்த இடத்துக்கு | ரேட்டு மணங்குக்கு அ. | ரேட்டு மணங்குக்கு பை. | எந்த தேதியி லிருந்து | ஷரா |
|---|---|---|---|---|---|---|
| உப்பு | அகஸ்தியம்பள்ளி | பொள்ளாச்சி | 5 | 7 | 15–11–33 | |
| ,, | ,, | போளூர் | 5 | 5 | ,, | |
| ,, | ,, | சாமல்பட்டி | 6 | 1 | ,, | |
| ,, | ,, | சிவகங்கை | 5 | 5 | ,, | |
| ,, | ,, | தேனி | 5 | 8 | ,, | |
| ,, | ,, | திண்டிவனம் | 5 | 5 | ,, | |
| ,, | ,, | திருக்கோயிலூர் | 5 | 5 | ,, | |
| ,, | ,, | திருப்பத்தூர் | 6 | 1 | ,, | |
| ,, | ,, | திருவண்ணாமலை | 5 | 5 | ,, | |
| ,, | ,, | உச்சிப்புளி | 5 | 8 | ,, | |
| ,, | ,, | உடுமலைபேட்டை | 5 | 5 | ,, | |
| ,, | ,, | உளுந்தூரு பேட்டை | 5 | 5 | ,, | |
| பாலஸ்டு | தாசம்பட்டி | பெங்களூர் | 1 | 9 | 15—11—33 | 14—11—34 வரையில் |
| தவிடு | போளம் | ,, | 7 | 3 | 1—12—33 | |
| இரும்பு [குருட் | பம்பாய் | மதுக்கரை | 14 | 9 | ,, | |
| மாங்கினிசைட் | சேலம் | மதராஸ் | 2 | 4 | 1—1—34 | |
| நெருப்புகுச்சி மரம் | படகாரா | திருவொற்றியூர் | 8 | 7 | 1—11—33 | |
| ,, | பெரோக் | ,, | 8 | 4 | ,, | |
| ,, | கல்லாயி | ,, | 8 | 4 | ,, | |
| ,, | சிலாம்பூர்ரோடு | ,, | 8 | 4 | ,, | |
| ,, | திரூர் | ,, | 8 | 1 | ,, | |
| ,, | வாணியம்பலம் | ,, | 8 | 4 | ,, | |
| பாலஸ்டு | திருச்சி கூடேஸ் | காரைக்கால் | 1 | 10 | 25—11-33 | 31—1—34 வரையில். |
| அடுப்புக்கரி | ஆரியன்காவு | மதுரை | 3 | 6 | 1—12—33 | |
| ,, | பகவதிபுரம் | ,, | 3 | 6 | ,, | |
| ,, | தென்காசி | ,, | 3 | 6 | ,, | |
| ,, | பகவதி புரம் | பேட்டை | 2 | 1 | ,, | |
| ,, | ,, | திருநெல்வேலி | 2 | 2 | ,, | |
| தேங்காய் [குச்லா | படகாரா | வெஸ்ட்ஹில் | 1 | 3 | ,, | |
| மருந்து சாமான் | மெலட்டூர் | எர்ணாகுளம் | 3 | 0 | ,, | |
| ஆவாரை இலை | சிவகாசி | தூத்துக்குடி | 3 | 0 | ,, | |
| விறகு | தானிஷ்பேட்டை | சேலம் மார்க்கட் | 1 | 2 | ,, | |
| மாவு | மதராஸ் பீச் | உளுந்துருபேட்டை | 3 | 3 | ,, | |
| தானியங்கள் | ,, | ,, | 3 | 3 | ,, | |
| நெல் | வாணியம்பலம் | மங்களூர் | 6 | 3 | ,, | |
| ,, | தொழப்பேடு | மதராஸ் பீச் | 2 | 3 | 15—12—33 | |
| ,, | ,, | ,, எழும்பூர் | 2 | 3 | ,, | |
| ,, | ,, | பரங்கிமலை | 2 | 0 | ,, | |
| கிரோசின்எண்ணை | எர்ணாகுளம் | மங்களூர் | 5 | 9 | 25—11—33 | |
| தானியங்கள் | மதராஸ் பீச் | உளுந்தூரு பேட்டை | 3 | 3 | 1—12—33 | |
| செங்கல் | நெல்லிகுப்பம் | அரக்கோணம் | 4 | 2 | 20—11—33 | |
| ,, | ,, | மதராஸ் பீச் | 4 | 2 | ,, | |
| உப்பு | அகஸ்தியம்பள்ளி | கள்ளிக்கோட்டை | 4 | 2 | 4—12—33 | |
| ,, | நாகப்பட்டணம் | திருவாரூர் | 0 | 6 | 15—12—33 | 14—3—34 வரையில். |
| கரும்பு | சிதம்பரம் | நெல்லிகுப்பம் | 0 | 10 | 1—12—33 | |
| யாம் | சிவகாசி | திருநெல்வேலி | 2 | 6 | 1—12—33 | 28—2—34 வரையில். |
| ஜவுளி | மதுரை | ராயப்பூர் | 18 | 2 | 1—11—33 | |
| செங்கல் | எடக்குளம் | கள்ளிக்கோட்டை | 1 | 0 | 5—1—34 | முதல் ரத்தாகி விடும். |
| காய்கறிகள்<br>பழங்கள்<br>உருளைகிழங்கு | குன்னூர்,வெல்லிங்டன், உதகமண்டலம். | திருச்சி கோட்டை<br>அல்லது<br>ஜங்ஷன் | 19 | 0 | 15—12—33 | |

## Mysore Mines.

Mysore is abundant with Mineral wealth and gold continues to play an important part. The Government of Mysore have recorded as "Satisfactory" on the working of the Department of Mines and Explosives for 1932 33, with Mr. C. E. Suryanarayana Row as Chief Inspector of Mines in the year under report.

The total area covered by mining leases and Prospecting Licenses was 20,272 acres and the total rents and cesses recovered in respect of them amounted to Rs. 14,096—8—0.

The total number of mining leases for gold was 21, the same as in the previous year. Mining operations were in progress in four blocks on the Kolar Gold Field against five in the previous year as the Balaghat Gold Mines, Ltd., ceased to work with effect from 1st May 1932 and the property was transferred to the Nundydroog Mines Ltd. The nominal and the paid-up capital of all companies carrying on operations in Mysore amounted to £ 1,563,000 and £ 1,513,772, respectively, for the calendar year 1932 as against £ 1,717,000 and £ 1,667,737, respectively, in the past year. The total quantities of fine gold and fine silver produced during the calendar year 1932 amounted to 329,574,899 ozs and 27.781,139 ozs.. respectively. against 330,434,024 ozs. and 22,604,850 ozs. during the previous year. The total value of fine gold and silver produced during 1932 amounted to £ 1,925,415—13—10 against £ 1,561,540-18-4, the increase in value being due to the high premium on gold. The total amount paid in dividends was £ 412,865-14-6 as against £ 219,010-16-0 during 1931. The royalty payable to Government on gold and silver won and on dividends paid amounted to £ 105,919-16-3 as against £ 83,086-16-1 (revised) in the previous year. The total demand on account of royalty payable to Government on gold and silver including the balance due for the previous calendar year amounted to Rs. 17,26,822-2-0. out of which Rs. 13,95,274-6-0 was collected leaviug a balance of Rs. 3 31,547-12-0.

The estimated total "ore reserves" of all the mines at the end of the year shows an increase of 152,078 tons. A sum of Rs. 7,338-4-0 was the Royalty Payable on the minerals viz Manganese, Chromite, Magnesite, Kaolin, Soapstone, Green Quartzite other than gold in the State during the year. The total demand under mining revenue other than royalty on gold for the year including the previous year's balance, was Rs. 85.567-8-8 and the same was realised in full. All the mines on the Kolar Gold Field were regularly inspected during the year and no serious defects or lapses of the mining rules are reported to have been noticed. The examination of the books a d accounts of the Champion Reef Gold Mines, Ltd., was conducted during the year by the Comptroller in association with the Chief Inspector of Mines and no irregularities were found.

The total number of persons employed in the mining industry during 1932 was 19,623 as against 19,109 in the year previous. Of this number 18,816 were employed in gold mining as against 18,388 in 1931. The Government note with gratification that efforts were being made by the mining authorities to improve the general condition of the workmen and that the relations between the employers and the employees was satisfactory.

The total number of accidents reported during the year was 217 against 200 in the previous year. Of these 45 were fatal, 168 serious and non-fatal and 4 non-mining. Out of 213 fatal and serious accidents, 22 were due to negligence, 18 to recklessness and 173 were classed as unavoidable as against 22, 10 and 163, respectively, in the previous year. The death rate in the gold mines was 3·93 per 1,000 against 7 12 per 1000 in 1931. In this connection the Government adds:—"The submission of a report of the Special Committee appointed to go into the question of adopting suitable measures for the prevention of rockbursts should be expedited."

During the year 731 licenses were granted under the Mysore Explosives Rules as against 703 during 1931. All the magazines included in the licenses granted by Government were inspected in detail during the year by the Officers of the Department and are reported to be in good order. 8 of the Government magazines in charge of civil officers were inspected by the Chief Inspector of Mines during the year and irregularities and defects noticed were pointed out to them. The total number of inspections of explosives premises carried out during the year by the Magistrates and Police Officers was 580 against 651 during the previous year, showing a decrease of 71 inspections. Government note that there has been some slackness in the regular inspection of explosive premises during the year by the said officers. The necessity and importance of systematic and regular inspection of all these premises in future cannot be too strongly stressed.

Have You enlisted yourself as Subscriber to

'Varthaga Oolian'

if not do so now.

**PURE GOLD**

is too dear. Buy Paris Gold the best Imitation Gold, and save money. Rs. 6 per oz; or Rs. to per 2 ozs. (5 tolas). If you hesitate, just get a sample—piece against Rs. 2—8—0 only, before placing a large order.

House of commerce—**Gauhati.**

## *America Gold Policy.*

The attitude of the United States Government reminds a critic of the kind hearted gentleman who had not the heart to cut off his dog's tail all at once, and cut off half an inch every day. That is what the Govt. is supposed to be doing to the dollar, according to this critic First, Americans went off the gold basis, next they took gold from anybody that had it in this country. Then they began buying gold, with paper dollars, but " only new gold, mined in the United States". Then they changed that to read " any kind of gold mined anywhere" and now they are competing with England buying gold" so says Dr. Sudhindra Bose Iowa City (America).

## Railway Case.

On the appeal petition of Mr. Jamunadas Ramjas, who claimed for Rs. 199-12-0 against E. I. Ry. & B. N. Ry. for the damage caused on account of Rain water having got into the wagon, the High Court Judge Patna, has decreed in favor of the Plaintiff against B. N. Ry.. In the course of his Judgment, His Lordship has observed as:– " The liability arises when loss, deterioration, or damage arises from "misconduct" of the Railway administration servants. "misconduct" would ordinarily mean failure to do what is required of a person to do. Certainly it was the duty of the Railway administration to provide against such ordinary contingency, such as rain water forcing itself into the wagon and causing damage to grain etc. in it. The fact that the rain water did enter the wagon and caused damage to the Plaintiff's consignment is itself sufficient to show that proper and requisite precautions were not taken by the Railway administration to provide against such contingency."

## *Hosiery Trade.*

The President of the Hosiery Trade Section of the Nottingham Chamber of Commerce, said that Japanese lisle stockings were being sold in Britain at prices with which British manufacturers could not compete even if they were given their raw materials free. He pointed out that in the first eight months of the present year Japan had increased her exports of hosiery to the British Dominions by no less than 1/3 compared with the previous year. While a large increase has also been shown in Japanese imports into Britain.

## *Devaluation of Rupee.*

That though the ratio amendment to the Reserve Bank Bill had been rejected, the Assembly should table a resolution for a devaluation of the rupee and express itself unequivocally on it, was the suggestion made by Mr. C. S. Rangaswami, Managing Editor "Indian Finance" at a dinner given in his honour at New Delhi by Dr. Ziauddin, M.L.A. A silver tea set was presented to him for his " services to Indian Finance" by " his friends of the Assembly."

Dr. Ziauddin expressed the thanks of a " large section of the Assembly members" for the great help and assistance given them by Mr. Rangaswami at considerable self-sacrifice in the Simla session, then at the time of the Select Committee and now in the special session. His suggestions had been a source of great strength to them in their efforts to shape the Bill and it was hoped that his advice would be forthcoming ungrudgingly in their task ahead.

Mr. Rangaswami acknowledging the tribute suggested a countrywide propaganda at the time when the shares of the Bank are on sale so that the largest number of them might be held by Indians of the non-capitalist class. On the question of ratio, he thought that a referendum from all Chambers of Commerce and professors of economics could be taken so that the Government might feel convinced of the strength of the popular demand for an immediate devaluation.

---

## Leather Industry.

Leather industry will be nowhere in India but for the initial work which Harijans, put into it. You will not expect me to go into the history of that industry.

But I can tell in terms of rupees, annas and pies that not less than nine crores worth of hides go out of India, but if we were to deal honourably with Harijans, they will all be absorbed in India or at least, they will not leave the shores of India in the raw state that the hides leave now, so said Mahatma Ghandhi.

**WANTED**

Capable agents of influence among merchants in all the important towns to canvas subscribers and to get advertisements for "Varthaga Oolian". Liberal terms to really capable workers.

Apply to:—The Manager,

**Varthaga Oolian, Trichinopoly.**

**A Patented formula**

for making acid vapour proof Artificial Gold (with out Gold, Platinum, or any costly material) Rs. 2—8—0 only. Free gift half tola of Paris Gold, if you order immediately.

House of Commerce—**Gauhati.**

**Advertise in 'Varthaga Oolian' and prosper in Trade.**

# TRADE SECRETS.

### *Quick-drying Copal Varnish.*

| | |
|---|---|
| Turpentine Oil | 1 part. |
| Alcohol | ½ ,, |
| Powdered Copal | 4 parts. |

Mix oil of turpentine and alcohol; then add slowly while stirring powdered copal. Place the mixture on a warm bath at 100°F and when dissolved leave the mass to settle and filter.

### *Red Marking ink.*

| | |
|---|---|
| Eosine Red | 2 drams. |
| Solution of Mercuric Chloride | ,, |
| Mucilage of acacia | 4 ,, |
| Rectified spirit | 8 ounces. |
| Oil of Lavender | 3 drops. |
| Distilled water | 16 ounces. |

Dissolve the eosine in the solution of mercuric chloride and 4 ounces of water; add the mucilage and mix. Then dissolve the oil in spirit and afterwards make up the whole.

### *Gold Colouring on Tin.*

| | |
|---|---|
| Shellac | 5 oz. |
| Turmeric | 2 oz. |
| Gamboge | 2 oz. |
| Dragon's Blood | ¼ oz. |
| Methylated Spirit | 3 points |

Dissolve the ingredients in methylated spirit and apply the lacquer on tin articles which should be thoroughly cleaned with soft soap and hot water and warmed.

### *Hardening Photo-film.*

| | |
|---|---|
| Hypo | 16 oz. |
| Water | 64 oz. |

Then add the following hardening solution:

| | |
|---|---|
| Sodium sulphite (Crystal) | ½ oz. |
| Acetic acid solution 25% | 3 oz. |
| Powdered alum | ½ oz. |
| Water | 5 oz. |

### *Starch Paste.*

| | |
|---|---|
| Gum arabic | 100 parts. |
| Starch | 75 ,, |
| Sugar | 21 ,, |
| Camphor | 4 ,, |

Dissolve the gum arabic with a small quantity of cold water; dissolve the starch in a little water contained in another vessel. Then mix the two and add sugar and camphor. Now put the vessel on a water bath and boil until a thin paste is formed. Remove from the fire and bottle it while still warm with a few crystals of salicylic acid or a few drops of oil of cloves to prevent fermentation.

### *Cheap Washing Soap.*

| | |
|---|---|
| Mahuwa oil | 20 seers. |
| Wheat Flour | 20 ,, |
| Soda lye (36°B) | 15 ,, |
| Powdered Salt | 7½ ,, |
| Soda Ash | 7½ ,, |
| Water | 2 mds.—16 seers. |

Put the oil in the iron pan and heat it well. When the oil is heated nearly to its boiling point put a few drops of water and observe the cracking sound which ensures the time for adding soda lye. When this is the case pour down 10 seers of lye out of the total 15 seers. Remove the fire and let it exhale vapours. When the chemical action is complete pour down the whole quantity of water into it and again boil for two hours. When it has got the consistency of honey, remove the fire. Now incorporate the other ingredients except the remaining portion of lye, which is added at last and stirred thoroughly. Afterwards the mixture is poured into frames. When dry take it out and cut it into tablets.

### *Sealing Wax.*

| | |
|---|---|
| Shellac | 7 parts. |
| Venetian Turpentine | 4 ,, |
| Vermilion | 3 ,, |

Melt the lac in a copper pan suspended over a clear fire; then pour the turpentine slowly into it, and soon afterwards add the vermilion, stirring the mixture briskly all the time with a rod in either hand. In forming the round sticks of sealing wax, a certain portion of the mass should be weighed while it is ductile, divided into the desired number of pieces and then rolled out upon a warm marble slab, by means of a smooth wooden block. The oval sticks of sealing wax are cast into moulds, with the above compound in a state of fusion. The marks of the lines of junction of the mould-box may be afterwards removed by holding the sticks over a clear fire or passing them over a blue gas flame.

### *Safety Match Head Composition.*

| | |
|---|---|
| Antimony Sulphide | 3 parts. |
| Potassium Chlorate | 6 parts. |
| Glue | 1 part. |

Water a sufficiency to make a paste.

Mix the ingredients forming a thin paste. Dip the stick heads and allow to dry. For this class of matches the rubbing should also be prepared. It is a mixture of amorphos phosphorous, antimony sulphide and glue. Care should be taken not to allow red phosphorous to come in contact with potassium chlorate as they form a dangerously explosive substance.

# ராஜம்—சமூக சீர்திருத்தக் கதை.

## Social Reform Novel.

(திரு. எம். எஸ். ஆர். சந்திரன் எழுதியது.)

டிசம்பர் மாதத் தொடர்ச்சி.

### அத்தியாயம் 19.

### ஆற்றங்கரை வம்பு;

---

ஜய வருஷம் சித்திரை மாதம் சுக்கிரவாரத்தன்று காலைநேரம் வெகு ரமணீயகரமாக இருந்தது. அப்பொழுது மணி ஆறுதான் இருக்கும் சூரியனும் உதயமாகிவிட்டான். ஊரிலுள்ள பட்சி இனங்கள் யாவும் இரைதேட வெளிக்கிளம்பிவிட்டன, தெருக்கள் நீர் தெளிக்கப்பட்டு சுத்தஞ் செய்யப்பட்டிருந்தது ஒவ்வொரு வீட்டின் வாயிலின் முன் செம்மண் பூச்சுடன் கோலமிடப்பட்டிருந்தது. சுக்கிரவாரத்தை முன்னிட்டு வீட்டுப் பெண்கள் (சுமங்கலிகள்) வீட்டிலேயே மங்களஸ்நானம் செய்துகொண்டிருந்தனர். அமங்கலிகளும் ஆண் மக்களும் அவ்வூரின் அருகில் ஓடும் ஆள் முழுங்கியாற்றில் வழக்கம்போல் ஸ்நானம் செய்துகொண்டிருந்தனர். கோடை காலமானதால் ஆற்றின் ஸ்ரீநிவாசய்யர் படிக்கட்டின் ஓரமாக ஜலம் ஓடவில்லை. ஆற்றின் மத்தியில் தெளிந்த நீர் கொஞ்சமாக ஓடிக்கொண்டிருந்தது. நீரோடியில் ஆழம் தோண்டியே ஸ்நானம் செய்து வந்தனர். ஒரே இடத்தில் மட்டும் ஆழமிருந்ததால் ஒருவர் பின்னொருவராக ஸ்நானம் செய்தனர். ஆடவர்கள் பலர் ஸ்நானம்செய்து கரையேறும்வரை மேற்சொன்ன ஸ்திரீகள் தனித்து நின்றுகொண்டிருந்தனர்.

"அடி சேஷி, என்ன அவாத்து சமாசாரம் உனக்குத் தெரியுமோன்னோ! அவருக்குத்தான் அப்படிக்கெல்லாம் வரணுமோடி." என்றாள் சுப்பு.

"ஆபாத்து சமாசாரம் நீ சொல்றே" என்று வினவினாள் சேஷி.

"அதாண்டி, அந்த சீனுய்யர் இருக்சார்ன்னோ, அவர்தாண்டி." என்றாள் சுப்பு.

"அதேஞ் சொல்றே அந்தக் கஷ்டத்தே. எனக்கு எல்லாந் தெரியும். அவர் பொண்ணேத்தான் அதாண்டி அந்த குட்டி ராஜத்தே, அந்த கட்டாலே போரவன், மணின்னு ஒரு தேத்துக்காலி ஒன்னு அவாத்துலெயே சாப்பிண்டு இருந்ததோன்னோ, அந்த நாசமாப் போரவன் அவளே இழுத்தூண்டு பூட்டான். அந்தக் கண்ட்ராவி அப்படியாச்சா. இந்தத் தரதலே இருக்கே அதாண்டி அந்த சீனுவய்யர் புள்ளே முத்து என்னமோ இங்கிலீஷ், கிங்கிலீஷ் படிச் சூட்டானும் அவன் கழுத்துலே அவன் தலே நிக்கிலே, அந்தமணிதங்கையேத்தான் தன் தங்கேன்னு காமிச்சு வடமாளாத்துலே சம்பந்தம் பண்ணிப்பிட்டான். ராஜத்தே கொண்டு போனானே அந்தக் கட்டாலேபோரவன், மணிதான் என்ன, அவனும் பிரக சரணந்தாண்டி". என்றாள் சேஷி.

சுப்பு:—வண்டி அந்த சீனுவையர் வடமனில்லையோடி. என்னடி இப்படி!

சேஷி:—இங்கிலீஷ் படிச்ச மகிமே எல்லாரும் ஒன்னாகணுமாம். அந்த முத்துதான் இந்த மாதிரிக்கெல்லாம் பண்ணினான். (கொஞ்சம் பெருமூச்சு விட்டு) சுப்பு, எல்லா கண்ட்ராவியிலும் பெரிசு என்ன தெரியுமோல்லையோ, அந்த பிராம்மணன்தான் இருக்காரே, ஏதோ தம் பொண்ணுன்னு நெனச்சுக்கிண்டு கல்லியாணம் பண்ணினாரு. விதியாரே விட்டுது, தாய் தோப்பனில்லாப் பொண்ணாச்சேன்னு பாக்காமே யாரோ வந்தானும், மாப்பிள்ளேக்கு உடம்பு தடபொடலாருக்குன்னு சொன்னானும், அந்த பிராமணன் கேட்டானும், முன்னும் பின்னும் தெரியாதவனோடே அந்தப்பொண்ணே கூட்டியனுப்பிச்சாராம். எண்டி சுப்பு, நீ சொல்ரி, அவன் பொண்ணா இருந்தா அப்படி வழிப்போக்கனோடே கூட்டி அனுப்பிச்சிருப்பானாடி, நீ சொல்ரி பார்ப்போம் கெட்ட எண்ணம் பொடச்சவன் கதியெல்லாம் இப்படித்தான்.

சுப்பு:—அடி, என்னடி தைர்யம், (என்று இரு உள்ளங்கைகளால் தட்டிக்கொண்டு வலதுகையை தன் கன்னத்தில் வைத்துக்கொண்டு ஆச்சரியப்பட்டு எண்டி, அந்தப் பிராமணனுக்குத்தான் இப்படி புத்தி போகணுமாடி.

காமாட்சி:—அந்த பொண் போனத்துக்கப்பறம் கடுதாசியே வரல்லையோடி

சேஷி:—எப்படிடி வரும். வந்தவன் யாரோ, ஒரு காத்தான், தீத்தான். அவனோடே கூட்டி யனுப்பிச்சா கடுதாசி கூட வருமாக்கோம் அவள் இருக்காளோ, பூட்டாளோ எதுடி நிச்சயம்.

வாலிப்பாட்டி:—எண்டி உன்னைத்தான் வாஸ்தவத்துலே சொந்தப் பொண்ணும், வளப்புப் பொண்ணும் ரண்டுமில்லையா இப்போ.

சேஷி:—ஆமாம் பாட்டி ஆமாம்.

பாட்டி:—ஐயோ, பாவம், அந்தக் குட்டிதான் எப்படி அவனோடே போச்சுடி. கட்டேலே வக்க இந்த பொண்களே, எல்லாம் பள்ளிக்கூடம் படிக்கிறதுகளோன்னோ. போராக்கொறைக்கு நாவலாம், கீவலாம்; அவள் இவனோடே போனா, இவன் அவளே இழுத்துண்டு போனான்னு சொல்ற பொஸ்தகமோ கணக்குல்லே. எங்காத்துலே இருக்கே ஒரு பாரெழவு, ஒரு தரித்திரம் அது பீரே நெரய இந்த எழவு பொஸ்தகத்தை அடுக்கி வச்சுருக்கு, சாப்பிடரதும், காபி குடிக்கிறதும், திங்கரதும், இந்த எழவு பொஸ்தகம் எதாவதொன்னே எடுத்து வச்சுக்குண்டு நாக்காலிலே படுத்துண்டுடும், அந்த நாரக் கட்டாலே போரபேரன் இருக்கான்னோ அந்த தடிப்பயல் அந்த தடிச் சிறுக்கியை ஒன்னும் சொல்லக்கூடாதாம். என் வயசுகாலத்துலே நான் எல்லாக் காரியத்தையும் செய்ய வேண்டிருக்குடி. எனக்குப் போரகாலம் இன்னும் வல்லே. பொண்களே படிக்க வச்சா இந்தப் பாரெழவுதான். இந்தச் சிறுக்கி யாரோடே போகக் காத்துண்டிருக்காளோ, தெரியுணும்.

சுப்பு:—அது கிடக்கட்டும் சேஷி, கல்யாணத்துக்கப்புறம் சம்பந்தி யாத்துலேர்ந்து யாராவது வந்து என்ன, ஏதுன்னு சீனுவய்யரைக் கேட்டானா, தெரியுமா.

சேஷி:—அவா புள்ளக்கித்தான் ஒடம்பு சரியில்லேன்னு அங்கே கடிதம் வந்திருக்காதா. அவாளுக்கு எத்தனையோ கவலை, அவா என்ன செய்வா.

காமாட்சி:—சீனுப் பொண்ணில்லேன்னு கலியாணத்தும்போது சம்பந்திக்குத் தெரிஞ்சிரிக்காதோடி.

சுப்பு:—அந்தக் கண்ட்ராவி யாருக்கென்ன தெரியும்.

சேஷி:—சீனுப் பொண்ணைத்தான் தம் புள்ளைக்கிக் கல்யாணம் பண்ணிண்ட்ருப்பதாக சம்பந்தி நினைச்சிண்டிருப்பார்.

பாட்டி:—என்னமோ ரண்டு நாள் வந்துட்டுப் போரபோது இந்த சூதல்லாத்தையும் எப்படி தெரிஞ்சுகொள்ள முடியும். நீதான் நெனச்சுப்பாரேன்.

காமாட்சி:—அது வாஸ்தவந்தான் பாட்டி.

பாட்டி:—எப்படி இருந்த குடும்பம் எப்படி சீரழியிரது பாரு. அதுவும், புள்ளையாகட்டும், பொண்ணாகட்டும். ரெண்டெழுத்து இங்கிலீஷ் படிச்சுட்டா அந்தக் குடும்பம் அடியோடே போச்சுடி. அது நிச்சயண்டி.

விசாலி:—என்ன பாட்டி அப்படி சொல்ரேள், எங்காத்துக்காரரும் நானும் இங்கிலீஷ் படிச்சுருக்கோம், நாங்க எங்க பொண்ணுக்கு கல்யாணம் பண்ணலையா. இப்படியா! எங்காத்துலே என்ன குறைச்சல். எல்லாம் இருக்கிறபடி இருந்தா ஒன்னுமில்லே.

சேஷி:—அது இருக்கட்டும், அந்த சீனுவய்யருக்குத் தான் என்ன கஷ்டம், இப்படியாவரணும் கஷ்டம், பொண்ணை மணி கல்யாணம் பண்ணுமலே அழச்சுண்டுபோட்டான். ஸ்வர்ணத்தின் கதியோ இப்படியாச்சு, சம்பந்தி முகத்துலே முழிக்க யோக்கியதே இல்லை. கல்யாணச் செலவோ 10ஆயிரம் வரைக்கும் செலவாயிருக்கும். எதிராளாத்துக்காரன் தொந்தரவோ விட்டபாடில்லை. அவனாலே நஷ்டம் வேறே இன்னும் என்னென்னமோ...

சுப்பு:—எதிராளாத்துக் காரன்னு யாரைச் சொல்ரே.

சேஷி:—ஊர் குடியைக் கெடுக்கிற பொன்னம்பலம். என்ன தீட்சதர் பட்டம் வேண்டிருக்கு.

காமாட்சி:—நான் ஒருரகசியம் சொல்ரேன், வெளிலே ஒத்தரும் சொல்லக் கூடாது (என்று சொல்லிக்கொண்டே) அந்தப் பிராமணன் சொரணத்தேகூட்டி அனுப்பிச்சான்னோ, அன்னிக்கி, கோணக்கரைப் பாலத்துக்கிட்டேபோய் அவள் போனவண்டியிலே ஏதோ சில பொட்டிகளையும், மூட்டையையும் வச்சூட்டு வந்ததை எங்க பண்ணையாள் ஒருவன் பார்த்து எங்காத்துக்காரரிடம் சொன்னானம்.

பாட்டி:—அப்படியா. இதிலே ஏதோ கபடம் இருக்கணும், இல்லாதபோனால் அவன் எதுக்குடி பொட்டியும் மூட்டையும் கொண்டுவந்து வக்கணும், இருக்கட்டும் ...

காமாட்சி:—பாட்டி, நீங்க ஒன்னும் வெளிவிட்டுடாதங்கோ. இதை எங்காத்துக்காரர் என்னை தெரிஞ்சா அடிப்பார்.

பாட்டி:—எனக்கு என்னடி இந்தக் கஷ்டம் நான் எண்டி சொல்லணும் இதை வெளியிலே.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கிற சமயம் சற்று தூரத்தில் ஸ்நானம் செய்துகொண்டிருந்த சம்பந்தி வெங்கனூர் வெங்கட்ரமணய்யர் கேட்டுக்கொண்டிருந்தார். கலியாணத்துக்குப் பிறகு முதலாவதாக அந்த ஊருக்கு அவர் வந்ததால் அக்கிரஹாரத்திலுள்ள பலர் சம்பந்தி தான் என்று அவரை நிச்சயிக்க முடியவில்லை. மேலும் அதிசாஸ்திர விற்பன்னராதலாலும், குடும்பங்களில் அசாஸ்திரிகமான வழியில் தம் பிள்ளைமுதல் சகலரும் நடப்பதைக்கண்டு சகியாதவராதலாலும் இல்வாழ்க்கையில் மனவெறுப்புகொண்டு ஏதோ ஒன்றை மனதிற்கொண்டு தம் மனோரதம் நிறைவேறும்வரை தீட்சை பூண்டிருந்ததால் யாருமே—அவருடன் நெருங்கிப்பழகாதவன் எவனுமே—அவரை இன்னாரென்று எளிதில் அறிதற்கு இயலாது. ஸ்ரீநிவாசய்யர் தமக்கு எழுதிய கடிதத்தின்பேரிலும், தம் குமாரன் ரங்கன் தமக்கு எழுதிய கடிதத்தின் உண்மையை அறிய வேண்டியும் ரங்கனாதபுரத்துக்கு வியாழன் காலை வந்தார்.

"மாப்பிள்ளை ரங்கன் உடம்பு அசௌக்கியமாக இருப்பதாக தமக்கு எழுதிய கடிதத்தையும் யாரோ ஒருவன் மூலம் தன் மனைவி ராஜத்தை உதவிக்கு உடனே அனுப்பி வைக்கவேண்டுமென்று எழுதியனுப்பிய கடிதத்தையும் நம்பியே கடிதத்தைக்கொண்டு வந்தவன் மூலம் ராஜத்தை அனுப்பிவைத்ததாக' சீனுவாசய்யர் சொன்னது" வெங்கட்டரமணய்யருக்கு அச்சமயம் ஞாபகத்துக்கு வந்தது. இவர்களது சம்பாஷணையில் சீனுவாசய்யரது பெண் ராஜத்தை யாரோ ஒருவன் அழைத்துச் சென்றுவிட்டதாகவும், வளப்புப் பெண் ஸ்வர்ணம் என்பவளைத்தான், வந்தவனுடன் கூட்டியனுப்பித்திருப்பதாகவும், அப்பெண் சீனுவாசய்யரது குமாரி யல்லவென்றும் பிரகசரண வகுப்பைச் சேர்ந்தவளென்றும் தெரிந்து மனம் வருந்தினார். சீனுவாசய்யரது குடும்ப பரம்பரையையும், யோக்கியதையையும் யோக்கியதையையும் நன்கு அறிந்த வெங்கட்ரமணய்யர் உடனே ஆத்திரப்படவில்லை. சாஸ்திர விசாரம் செய்துள்ள வெங்கட்ரமணய்யர் பொறுமையை ஏற்றுக்கொண்டார். தம்மையும், தன் சம்பந்தி சீனுவாசய்யரையும் யாரோ பகைவன் சூதுசெய்து அவமானத்தை யுண்டுபண்ணுவதாகவே நினைத்தார். அப்பெண்ணை வந்தவன் அழைத்துச்சென்றபோது எதிர்வீட்டு பொன்னம்பல தீட்சதர் ஏதேதையோ கொடுத்தாரென்று சம்பாஷணையில் குறிப்பிடப்பட்டதை அய்யர் ஞாபகப்படுத்திக்கொண்டார். வரவரக்கவலையும் அவருக்கு அதிகரித்துவிட்டது. அந்த ஸ்திரீகள் கோஷ்டியில் இருந்த பாட்டியுடன் பேச வெங்கிட்டரமணய்யர் ஆசைப்பட்டார். பாட்டியுடன் எப்படி பேசுவதென்று அவருக்கு முதலில் தெரியவில்லை, எதற்கும் தம் மனதைத்திடப்படுத்திக்கொண்டு, பாட்டி ஸ்நானம் செய்து புறப்பட்டு மெதுவாக நடந்து சென்ற சமயம் பாதையில் பாட்டியைச் சந்தித்து "நமஸ்காரம்" என்றார் அய்யர் "யாரு நீங்க எனக்கொன்னும் தெரிய

## திருச்சி நம்பிள்ளை ஸபை

ஸ்ரீவைஷ்ணவ பரீக்ஷை டிசம்பர்-மீ 10உ நடந்ததில் தேறினவர்களுக்கு ஸ்ரீரெங்கம் ஸ்ரீபரகால ராமாநுஜ கூடத்தில் 27, 28, 29, & (30 பெண்கள் மஹாநாடு) தேதிகளில் கூடிய மஹாநாட்டில் ஸ்ரீவைஷ்ண மஹா சங்கத்தாரால் தங்கப் பதக்கங்கள் முதலிய பரிசுகள் கொடுக்கப்பட்டது.

N. B.—ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஸந்நிதியில் தாராபுரம் ஸ்ரீமாந் நம்பெருமாள் ராமாநுஜ ஸ்வாமி ப்ரதிதினமும் ஸ்ரீமத் ராமாயணத்தை ஸ்வரூபாநுரூபமாக செவிக்கினிய செஞ்சொற்களோடு தேனும், பாலும், நெய்யும், கன்னலும் அழதுமாகி தித்திக்குமாறு ஆஸ்திகர்களுக்காக உபந்யஸிக்கிறார்கள். அனைவரும் வந்து கேட்டு ஆனந்திக்கவும்

ல்லையே" என்றாள் பாட்டி. "நான் தான் வெங்கனூர் வெங்கட்ரமணய்யர், ஸ்ரீநிவாசய்யர் சம்மந்தி" என்று பதில் கூறினார். "ஆஹா அப்படியா. ஊரிலே எல்லோரும் சௌக்கியமா?" என்று பாட்டி கேட்டுவிட்டு சற்று நின்று சிரம பரிகாரம் செய்துகொண்டாள்.

"என்ன இந்த வேஷம், யாருகுடியைக் கெடுக்க" என்று பொன்னம்பல தீட்சதர் குணங்களை யேற்கையிலேயே அடையப்பெற்ற வாலிப் பாட்டியும் வெடுக்கென மிடுக்காகக்கேட்டாள். இப்படிக் கேட்டதும் அய்யருக்கு ஒன்றும்விளங்கவில்லை. அய்யரோமிக ஆசார சீலர், விவேகி, சாஸ்திர விற்பன்னர், யார் எதைச் சொன்னாலும் எளிதில் நம்பும் சுபாவமுள்ளவர், பொறுமை, சத்தியம், தயை ஆகிய முக்குணமும் பொலிந்து விளங்குபவர். பாட்டி இப்படி சொன்னதும் புன்சிரிப்புகொண்டு, கிணறுவெட்ட பூதம் புறப்பட்டது போலாயிற்றென்று மனதிற்குள் வருத்தமுற்றாலும் இது தெய்வீகமான சம்பவமென்று கருதி பாட்டியிடம் பாட்டி, தாங்கள் வித்தியாச பாவத்துடன் என்னை பார்க்கிறமாதிரி தெரிகிறதே, அப்படித்தானா". "ஒன்னுமில்லை, வயசாச்சோன்னோ, யாரையோ நெனச்சுக்கிண்டு அப்படிச் சொன்னேன். இருக்கட்டும் ஒங்க நாட்டுப் பொண்ணு யாரோடேயோ போயிட்டாளாமே. என்ன அப்படி". "பாட்டி, நீங்கள் சொல்லுவது எனக்கு நன்றாக விளங்கவில்லை. நான் இதுவரையில் வெங்கனூரில் இருந்துவிட்டேன். எனக்கு விஷயம் ஒன்றுமே தெரியாது. நீங்கள் விபரமாகச் சொன்னால் உங்களுக்கு எப்போதும் விஸ்வாசம்——."

விஸ்வாசம் என்ன எனக்கு வேண்டிருக்கு, நான் சங்கதி சொன்னா எனக்கு என்ன தருவேள்."

"என்னவேண்டும், சொல்லுங்கள் தருகிறேன்"

"எனக்குத்தானே ஒரு கலம் நெல்லும் ஒரு ரூபாயும் கொடேன். இந்த மாசத்தே மெதுவா தள்ளிவிடறேன்."

"நெல் எங்கள் ஊரில் இருக்கிறது பாட்டி. நெல் கொண்டுவர முடியாது. அதற்குப் பதிலாக ரூ. 5 தருகிறேன், திருப்திதானே."

ரொம்ப சந்தோஷம்" என்றுசொல்லி வாலிப்பாட்டியும் தான் கேட்டது, கண்டது; யாவற்றையும் சவிஸ்தாரமாக விளக்கிக் கூறினாள். வளப்புப்பெண் ஸ்வர்ணம் என்ற பிரகசரண வகுப்புப் பெண்ணைக்காட்டி ஸ்ரீநிவாசய்யர் தன்னை ஏமாற்றி விட்டாரோ என்று ஏக்கங் கொண்டார். தன் குடும்பத்துக்கும் ஸ்ரீநிவாசய்யர் குடும்பத்துக்கும் நீண்ட கால நட்பு இருந்து வந்திருக்கும்போது பெரிய அந்தஸ்துள்ள ஒருவர் இவ்வளவு கேவலமாக நடந்து கொள்ள நாம் என்ன தீங்கை அவருக்கு இழைத்துள்ளோம். ஒன்றுமில்லையே. அப்படியிருக்க இச் சம்பவம் நிகழவேண்டியதின் அவசியம் என்ன.

நமது பிள்ளைக்கு வளப்புப் பெண்ணை விவாகம் செய்துகொடுக்க ரூ. 5000 வரை செலவிட அவசியம் என்னவந்தது மேலும் இவரது சொந்தப் புதல்வியின் வரலாறும், தற்போது எங்கு இருக்கின்றாள் என்பதும் ரகசியமாக இருக்கிறது. நானும் இவ்வூருக்கு வந்து இரண்டுநாட்களாகின்றன. இது விஷயமான தகவல் ஒன்றையும் எடுத்துச் சொன்னாரில்லை. வளப்புப் பெண்ணுக்கு ரூ. 5000 செலவிட்டாரானால் அதில் ஏதோ மர்மம் இருக்கவேண்டும். மேலும் ஸ்ரீநிவாசய்யர் நடத்தையைப்பற்றி சந்தேகிக்கவும் ஹேதுவில்லை. வீட்டில் மூத்துவையும் காணோம் வளப்புப் பெண்ணிடம் அபிமானம் உள்ளவராக இருந்தால் யாரோ வழிப்போக்கன் மூலம் அப்பெண்ணை அனுப்ப சம்மதித்திருக்க முடியாது. எதற்கும் சாப்பாடானபிறகு சாவகாசமாக அவரைக்கேட்டு உண்மை நிலையைத் தெரிந்துகொள்ளுவோம் என்று நினைத்துக்கொண்டு ரங்கனாதபுரம் அக்கிரஹாரத்தை நோக்கிப் புறப்பட்டு வந்தார்.

(தொடரும்)

---

## வைசிராய் அபிப்பிராயம்.

வைசிராய் விசாகப்பட்டிணம் துறைமுகத்தை சென்றமீ திறந்து வைத்துப் பேசுகையில் சொன்னதாவது:—"இந்தியா வர்த்தகத் துறையில் முன்னேற்றமடைவதற்குப் பெரும் சாதனமாக இத்துறைமுக வேலை பூர்த்தியானதைக் கொண்டாடவே நாம் இங்கு கூடியிருக்கின்றோம். பல தேசங்களுக்குள் போக்குவரத்து சம்பந்தம் ஏற்படுத்துவதற்கு துறைமுகம் ஒரு சாதனமாகும். பிரயாணிகளும், சாமான்களும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சீக்கிரம் செல்லக்கூடும். சில தேசங்களுக்கு இயற்கையான துறைமுகங்கள் பல இருக்கின்றன. ஆனால் பண்டை காலத்திலேயே இந்தியாவுக்கும் இதர நாடுகளுக்கும் கப்பல் போக்கு வரத்து இருந்ததென்பதற்கு உரித்த அத்தாக்ஷிகளிருக்கின்றன. பல நூற்றாண்டுகளாக அயல் நாட்டார் இந்த துறைமுகத்திற்கு வந்துள்ளனரென்றும் தெரிகிறது. சென்னை துறைமுகம் அமைக்கப்பெறும் முன்பு இந்தியாவின் கிழக்குக் கரையோரமாக நவீன துறைமுகமே இல்லையென்று கூறலாம்.

இத்துறைமுக திட்டத்திற்கு மூல காரணமாகவிருந்த வங்காள நாகபுரி ரயில்வேக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம். இத்திட்டத்திற்கு அதிகசெலவு பிடித்தபோதிலும் பிறகு பலன் உண்டென்பதை சர்க்கார் நன்கு உணர்ந்தே இவ்வேலையை மேற்கொண்டனர். ரயில்வே அதிகாரிகள் ரைபுரி-விஜயநகரம் லயனை ஏற்படுத்தியதும் பொருத்தமானதேயாகும். விவசாய அபிவிருத்தியையும் உத்தேசித்தே நாங்கள் இத்திட்டத்தை ஆரம்பித்தோம். விசாகப்பட்டிணம் துறைமுகம் நல்ல இடத்திலும் அமைந்துள்ளது. கடந்த 7-வருஷங்களாக இத்துறைமுக வேலை நடந்து வந்தது பற்றிய விபரங்களை ஸ்ரீ ஆவ்ஷ அழகாக எடுத்துக் கூறினார். பிரதம இஞ்சினியருக்கும் இவ்வேலையில் ஈடுபட்ட மற்றவர்களுக்கும் நான் எனது மனமார்ந்த வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இனி துறைமுக நிர்வாகத்தை மேற்கொள்ளுவோரும் திறமையுடன் நடந்து கொள்ளுவார்களென்று நான் நம்புகிறேன்.

வர்த்தக மந்தம் ஏற்பட்டுள்ள இப்பொழுது, இத்துறைமுகம் கட்டியது பயனுடைய காரியமல்லவென்று கூறுவது தவறாகும். பொருளாதார கஷ்டம் சீக்கிரம் நிவர்த்தியாகக்கூடும் வர்த்தகம் மீண்டும் புத்துயிர்பெறும் காலத்து இத்துறைமுகம் தயாராக விருப்பது மிக்க சிறந்ததாகும். சீக்கிரம் இந்தியாவின் வர்த்தகம் அபிவிருத்தியாகுமென்று நான் கூறுவதோடு, மற்றொரு விஷயத்தையும் தெரிவிக்க விரும்புகின்றேன். ஆரம்ப நிலையிலிருக்கும் கைத்தொழில்களும் சீக்கிரம் அபிவிருத்தியடையுமென்பதே எனது நம்பிக்கை. எதிர்காலத்திற்கேற்ற திட்டமொன்றை வகுப்பது சாத்தியமல்லவென்பதை விசாகப்பட்டிணம் துறைமுகம் பொய்யாக்கிவிட்டது. எதிர்கால சந்ததியாருக்கு இத்துறைமுகத்தில் மிக்க அநுகூலமுண்டென்பதையே நாம் கவனிக்க வேண்டும். அவர்கள் நமது தீர்க்க தரிசனத்தைப் பாராட்டுவார்களென்பது திண்ணம்."

# மதிப்புரைகள்.

## Reviews.

### சங்கராவுடையம்மன் ஆசிரிய விருத்தம்.

கீழப்பாவூர், அருட்கவி திரு. நா. வெ. ராமசாமி முதலியார் அவர்கள் இயற்றிய சங்கராவுடையம்மன் ஆசிரிய விருத்தம் கிடைக்கப்பெற்றோம். சங்கரநயினார் கோவிலில் எழுந்தருளியிருக்கும் சங்கராவுடையம்மன் மீது பாடப்பட்ட ஆசிரிய விருத்தம். இப்புஸ்தகம் பலருடைய பொருளுதவியால் தென்காசி ஸ்ரீராமாநுஜம் பிரஸில் பதிப்பிக்கப் பெற்றது. புஸ்தகத்தில் விலை குறிப்பிடாததினால் இனமாக கொடுக்கப்படுமென்று தெரிகிறது.

* * *

### வீரகேசரி விட்டல்பாய் படேல்

"நான் இறக்குமுன் இந்தியா சீக்கிரத்தில் சுயேச்சை அடைய வேண்டுமென்றே பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்ன தேசியத்தலைவர் ஸ்ரீமான் விட்டல் பாய்படேல் அவர்களின் குணவிசேஷங்களையும், அபார சாமர்த்தியத்தையும், தேசத்திற்காக அவர் செய்துள்ள அரிய சேவையையும், அவருடன் நெருங்கிப் பழகும் பாக்கியத்தைப்பெற்ற, சுதேசமித்திரன், துணை ஆசிரியர், திரு. ஆர். கிருஷ்ணமாச்சாரியார் அவர்களால் தமிழ் உலகத்திற்கு, திறம்படதொகுத்து, இனிய தமிழில், சுலபமான நடையில் எழுதி, சென்னை, மைலாப்பூர், அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப்பட்டதும், வீரகேசரி விட்டல் பாய்படேல் என்ற நாமம் சூட்டப்பட்டதுமான இப்புத்தகம் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. 10 சித்திரப் படங்களுடன், 231 பக்கங்களுடன், பன்னிரண்டணுவுக்கு விற்கப்படுகிறது. இப்புத்தகத்திற்கு இந்திய சட்டசபை தலைவர் சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் கே. சி. ஐ. இ. அவர்கள் முன்னுரையும், இந்து பத்திரிகையின் ஆசிரியர் திரு. அ. ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள் சிறப்புரையும் எழுதியிருக்கின்றார்கள். தேசிய தலைவர்களின் சரிதைகளை சரியாக எழுதி வைக்கும் வழக்கம் நமது தேசத்தில் இல்லாமலிருந்து வருவதை நீக்கவே இப்புஸ்தகம் எழுதப்பட்டிருப்பதால் தமிழ்மக்கள் எல்லோரும் வாங்கி தேசீய ஞானத்தை புகட்டிகொள்வார்களென்று நம்புகிறோம்.

* * *

### ஸ்ரீரேங்கவிலாச கானம்.

திருவாளர் டி. ஆர். வெங்கடேஸ்வர கர்த்தா அவர்கள் இயற்றியதும், தென்காசி தாலுகா, பாவூர் சத்திரம் போஸ்டு, பனையடிப்பட்டி திரு. ரா. ஆதிமூல அண்ணாவி அவர்களால் தென்காசி ஸ்ரீராமாநுஜம் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றதுமான ஸ்ரீரெங்கவிலாச கானம் என்ற புத்தகம் கிடைக்கப் பெற்றோம். இப்புத்தகத்தில் பகவான் மீது பல பாடல்கள் பாடி தொகுக்கப் பட்டிருக்கிறது. விஷ்ணு பக்தர்களுக்கு அவசியம் வேண்டியது. இதன் விலை அணா எட்டு.

* * *

### பால்ய விவாகம்

அம்பாசமுத்திரம் தீர்த்தபதி ஹைஸ்கூல் தலைமைத் தமிழ் பண்டிதர் திரு. ஹரிஹர அய்யர் அவர்களால் இயற்றப்பட்டு அம்பாசமுத்திரம்ஸ்ரீராமகிருஷ்ண பிரசில் பதிப்பிக்கப்பட்ட பால்ய விவாகம் என்னும் புஸ்தகம் கிடைக்கப்பெற்றோம். இக்காலத்தில் நம் நாட்டில் நடை பெற்றுவரும் மணவினை எவ்வளவு தூரம் தகுதியற்றது என்பதனை விளக்கிக் காட்டு தலையே நோக்கத்தைக் கொண்டு, எளிய நடையில் நாடகரூபமாக எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகத்தில் மனைவியின் தொந்திரவுக்கு உள்பட்டு 5 வயதுள்ள பெண்ணை 7 வயதுள்ள பிள்ளைக்கு கல்யாணம் செய்ய நிச்சயித்தும் கடைசியில் கல்யாணம் நிறைவேறாமல் அதே நேரத்தில் இரு பொம்மைகளை வைத்து கல்யாணம் நடைபெற்ற விதத்தை எழுதியிருக்கிறது. பால்யவிவாகத்தை ஆதரிப்பவர்கள் இதை வாசித்தால் இதனால் நேரிடும் கெடுதிகளை நன்கு உணரலாம். இதன் விலை அணா இரண்டு.

* * *

### சீவகன்.

அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழி நூல்வளம் நிரம்பியதென்பது அறிஞர் அறிந்தது. இம்மொழியிலுள்ள பல்வகையிலக்கியங்களுள் ஐம்பெருங் காப்பியங்கள் சிறந்தனவாய் எடுத்தோதப் பெறும். அவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி யென்பன. இக்காப்பியங்களில் முதற்கண் கூறப்படுவது சிந்தாமணியே இதில் சீவகன் கதை கூறப்பட்டுளது. இந்த கதையை போளூர், போர்டு, உயர்தர பாடசாலை, தலைமைத் தமிழாசிரியர், திருமிகு வி. சாமிநாதப் பிள்ளை உரை நடையிலெழுதியுள்ளார். இதன் முதனூலை யோதி யுணர்தற்கு இஃதோர் அடிப்படைக்கருவியாக யிருத்தலானும், இதுபோன்ற வரலாறுகளைத் தமிழர் ஒவ்வொருவரும் அறிதல் ஒரு தலையாக வேண்டப்படுதலானும், இதன் கண் கூறப்படும் நல்லொழுக்கங்களும் அறிவுரைகளும் மாந்தர்க்கு உறுதி பயப்பனவாதலாலும், உரை நடைப் பாடம் பயிலும் மாணவர்க்கு இஃதோர் சிறந்த பாட புத்தகமாக இருத்தலாலும், கட்டுரை யெழுதப் பயிலுவார்க்கு வேண்டிய நடையும் பொருளும் இதன் கண் அமைந்து கிடத்தலானும் இவ்வுரை நடை நூல் ஓர் பயன் தரும் நூலேயாகும்.

இதற்கு குடந்தை,அரசினர் கல்லூரி, தமிழ் பண்டிதர், திருமிகு அ. கந்தசாமிபிள்ளை அவர்கள் நூன்முகம் எழுதியிருக்கின்றார். தமிழுலகம் இதனை விரும்பியேற்று, தமிழ்மக்களனைவரும் கற்று பயனடையும்படியாக கேட்டுக் கொள்ளுகிறோம். 13 சித்திரப்படங்களுடன் கூடிய இப்புத்தகத்தின் விலை அணா எழு. கும்பகோணம் வி. எஸ். வெங்கட்டராமன் கம்பெனி அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

* * *

### கந்தபுராண ரகசியம்

திண்டுக்கல் திரு. சுந்தரராஜ அவர்களால் வெளியிடப்பட்ட கந்தபுராண ரகசியம் என்னும் புஸ்தகம் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டது. கந்தபுராணத்தின் முதலாம் பாகமாகிய தக்ஷிண காண்டத்தை ஆராய்ச்சி செய்து வசன நடையில் எழுதப்பட்டிருக்கிறது. கந்த புராணத்திலிருக்கும் சிற்சில ஊழல்களை எடுத்துக் காண்பிக்கிறது. இதன் விலை அணா இரண்டு, இப்புஸ்தகம் ஸ்ரீரெங்கம் சாத்தானிரோடு, 1298 நெ. இலக்கமுள்ள வீட்டில் திரு. எஸ். ஆர் முனிசாமி அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளவும்.

* * *

T

## பிரான்சு-இந்திய வர்த்தகம்.

இந்தியா, பர்மா, இலங்கை ஆகிய தேசங்களில் பிரெஞ்சு வியாபாரக் கமிஷனர் கர்னல் பானுடு டிசம்பர் முதல் தேதியன்று லாகூர் ரோட்டரி கிளப்பில் பிரான்ஸுக்கும் இந்தியாவுக்குமிடையில் நடக்கும் வியாபாரத்தைப் பற்றிப் பேசிய சுருக்கம்:-உலகை பாதித்திருக்கும் பெரும் பொருளாதாரச் சுணக்கம் பிரான்ஸுக்கும் இந்தியாவுக்குமிடையில் நடக்கும் வியாபாரத்தையும் வெகுவாகப் பாதித்துவிட்டது. யுத்தத்திற்கு முன்பு இந்தியாவிலிருந்து பிரான்ஸுக்கு சராசரியாக 14·78 லக்ஷ ரூபாய்க்கு ஏற்றுமதியும், பிரான்விலிருந்து இந்தியாவுக்கு 2·21 கோடி ரூபாய்க்கு இறக்குமதியும் நடந்து வந்தன. சென்ற வருஷத்தில் ஏற்றுமதி 7·35 கோடியாகவும் இறக்குமதி 2·04 கோடியாகவும் குறைந்துவிட்டது. பிரான்சு இந்தியாவிலிருந்து சணல், பருத்தி; மணிலாக்கொட்டை, சகலவிதமான வித்துக்கள், காப்பிக்கொட்டை, மாங்கனீஸ் முதலிய மூலப்பொருள்களையே வெகுவாக வாங்குகின்றது. பிரான்விலிருந்து இந்தியா பெரிதும் கம்பளங்களையும், சாராயங்களையும், திராக்ஷை ரஸங்களையும், மருந்துகளையும், ரப்பர் சாமான்களையும், சில உணவுப்பொருள்களையும், இரும்பு சாமான்களையும், மோட்டார்களையும், சோப்பு, தைலம், செண்டுகள் முதலியவற்றையும், ஆகாய விமானங்களையும், மோட்டார்களையும், சைக்கில்களையுமே வாங்குகின்றது. சாம்பைன் தான் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டபோதிலும் பிரான்விலி் கிடைக்கக்கூடிய வேறு பல சாமான்களையும் வாங்கவேண்டும். பிரெஞ்சு சாமான்கள் இந்தியாவில் உற்பத்தியாகும் சாமான்களுடன் போட்டி போடுவதில்லை. இறக்குமதியின் அளவு முக்கியமில்லை என்றும் இந்தியக் கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காக இவற்றிற்கு வரி விதிக்கலாமென்றும் சொன்னால் இந்தியா தனக்குத்தானே அனுவசியமாகத் தீங்கிழைத்துக்கொண்டதாகும். பொருளாதார நிலைமை சாமான்ய நிலைக்கு வந்ததும் இரு தேசங்களுக்குள்ளும் நடக்கும் வியாபாரத்தைப் பெருக்க எவ்வளவோ ஹேதுக்களிருக்கின்றன. வருஷா வருஷம் மே மாதத்தில் நடக்கும் பாரிஸ் சந்தையிலும் 1937-ம் வருஷத்தில் பாரிஸில் நடக்கவிருக்கும் சர்வதேசப் பொருட்காட்சியிலும் இந்தியா கலந்துகொண்டு இரண்டு தேசங்களுக்குமிடையிலும் நடக்கும் வியாபாரத்தைப் பெருக்கலாம். இந்தியர்கள் பிரான்ஸுக்கு அதிகமாக வந்தால் அவர்களை வரவேற்க நாங்கள் தயாராக இருக்கிறோம். பிரான்ஸில் மைய்யமானதொரு இடத்தில் தகவலறிவிப்புக்கூடமொன்றை இந்தியா ஏற்படுத்தினால் பல நூற்றாண்டுகளாக இரண்டு தேசங்களுக்குமிடையிலிருந்து வரும் வியாபார, சமூக சம்பந்தங்களைப் பலப்படுத்தி பெருக்க ஹேதுவாக இருக்கும்.

## புதிய தீர்வை.

இந்தியா சட்டசபையில் டிசம்பர் 22வ அன்று புதிய தீர்வை திருத்த மசோதாவை சர்க்கார் கொணர்ந்தனர். அம் மசோதாவின் நோக்கத்தைப்பற்றி சர்க்கார்வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது :—

சென்ற வருஷம் பல இந்திய கைத்தொழில்களுக்கு விதேச சரக்குகளால் என்றில்லாதபடி போட்டி ஏற்பட்டது இதனால் அக்கைத்தொழிலுக்கே நாசமேற்பட்டுவிடும் போலிருந்தது. சாதாரண நிலைமையில், இக்கைத்தொழில்கள் சட்டப்படி பாதுகாப்புப் பெற முடியாது. ஆனால் தற்போதேற்பட்ட விசேஷ நிலைமையைக்கருதி சர்க்கார் பல கைத்தொழில்களின் நிலைமையையும் நன்றாக பரிசீலனை செய்து, இறக்குமதி சாமான்களுக்கு அளவுக்குத்தக்கபடி தனித்தனியே குறைந்த அளவு காப்புத் தீர்வையை நிர்ணயித்துள்ளனர். இப்புதிய தீர்வை எல்லா தேசங்களையும் சமமாக கட்டுப்படுத்தும். இந்திய கைத்தொழில்களுக்கு போதிய அளவு பாதுகாப்பு அளிப்பதையும், இந்திய கைத்தொழில்களுக்கு அதிக ஆபத்து அளிக்காத இறக்குமதி சாமான்களுக்கு அனுவசியமாக, தீர்வை உயர்த்தாமல் தடுக்க வேண்டியதையும் முக்கியமாகக் கருதியே இப்புதிய விகிதம் தயாரிக்கப் பெற்றுள்ளது.”

இப்புதிய தீர்வையால் இறக்குமதி குறைந்தாலும் கூட சர்க்காருக்கு ரூ. 20 லக்ஷம் வருமானம் கிடைக்கும். இறக்குமதி ஒரே சீராக இருப்பின், ரூ. 40 லக்ஷமும் சர்க்காருக்கு அதிகப்படியாக வருமானம் கிடைக்கும். கைத்தொழில் பாதுகாப்புச்சட்டப்படி சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாமெனினும் அவ்விதம் செய்யவில்லை. பல தேசங்களுக்கும் வித்தியாசம் காட்ட வேண்டியிருக்குமெனும் காரணத்தை முன்னிட்டே சர்க்கார் அவ்விதம் செய்யவில்லை. மிகவும அவசரமேற்பட்டால், கைத்தொழில் பாதுகாப்பு சட்டத்தை சர்க்கார் அமுலுக்குக் கொண்டு வருவர். சாமான்களின் அளவுக்குத்தக்கபடி திட்டமான தீர்வை விதிப்பதால் நேர்மையற்ற போட்டியினின்றும் இந்திய கைத்தொழில்களைப் பாதுகாக்கலாம். எதாவது ஒரு தேசம் சாமான்களை என் மலிவாக விற்பனை செய்கிறதென்றும் கேட்க வேண்டிய அவசியமேற்படாது. மீன் எண்ணெய், கற்கண்டு இத்தொழில்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதென்று தீர்மானிக்கப் பெற்றுள்ளது. கம்பளி பின்னல் துணி வகைகளுக்கு 100க்கு 35 வீதமோ அன்றி பவுண்டுகளுக்கு 18 அணு வீதமோ (அதிகமாக உள்ள) தீர்வையை வசூலிப்பர்.

பருத்தி ஸ்டாக்கிங்ஸுகளுக்கு 100க்கு 25 அல்லது ஒரு டஜனுக்கு 10 அணு வீதமும், கால் சட்டைகளுக்கு டஜன் 1க்கு 1½ வீதமும், “மாக்னீஷியம் கிளோரைட்” உப்புக்கு அந்தருக்கு ரூ. 1-5-0 வீதமும் அல்லது மதிப்புக்கு தக்கபடி 25% வீதமும், பீங்கான் ஓடுகள் முதலியவைகளுக்கு 30% அல்லது ஒரு சதுர அடிக்கு 2 அணு வீதமும் தீர்வை வசூலிக்கப்படும்.

தற்போதைய சட்டப்படியுள்ள உபரி வரியும் இப்புதிய தீர்வையில் உள்ளடங்கிவிடும். கீழ்க்கண்ட இறக்குமதி சாமான்கள் இம்மசோதாவில் சேர்க்கப் படும் :—

கீழ்த்தர பஞ்சு ஜவுளி வகைகள் 75% தீர்வை. இவைகளின் இறக்குமதி அதிகரித்து விட்டதால் வருமானத்தை உத்தேசித்து இத்தீர்வை விதிக்கப்பட்டுள்ளது. பட்டு, இமிடேஷன் பட்டு இவைகளுக்கு 50% தீர்வை விதிக்கப்படும். குடைகளுக்கு 30 அல்லது ஒரு குடைக்கு 8 அணு வீதமும், பூட்ஸ் ஜோடிக்கு 3 அணு அல்லது 25%; சோப்புகளுக்கு 35% அல்லது அந்தருக்கு 20. மீன் எண்ணெய்க்கு அந்தருக்கு ரூ. 10-8-0 அதிகப்படியான தீர்வைகளே வசூலிக்கப்படும் மசோதா உடனே அமுலுக்கு வரும்.

## வர்த்தகஊழியன் கிடைக்குமிடம்.

ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள சுதேச மித்திரன் புஸ்தக சாலைகளிலும், சேலம், தஞ்சாவூர், விருதுநகர், பொள்ளாச்சி, கரூர் முதலான இடங்களிலிருக்கும் “தமிழ்நாடு” கடைகளிலும் ‘வர்த்தக ஊழியன்’ கிடைக்கும்.

மானேஜர்.

## வர்த்தகக்குறி வழக்கு.

(Infringement of Trade Mark.)

ஜப்பானிலிருந்து நாய் ஒன்று கிராமபோனைக் கேட்பதுபோல ஒரு படத்துடனும் “மாஸ்டர்ஸ் வாய்ஸ்” என்று கீழே செதுக்கப்பட்டுள்ள எழுத்துக்களுடனும் தயாரிக்கப்பட்ட ரிகார்டுகளைத் தருவித்துக் கல்கத்தாவில் ஒரு இந்திய கம்பெனி வியாபாரம் செய்வது சம்மந்தமாக ‘ஹிஸ் மாஸ்டர்வாய்ஸ்’ கிராமபோன் கம்பெனியார் ஒரு வழக்கு தொடுத்தார்கள். பிரிட்டிஷ் இந்தியாவெங்கும் ‘ஹிஸ்மாஸ்டர் வாய்ஸ் வியாபாரக்குறியுடன் கூடிய ரிகார்டுகளை விற்கத் தாங்களே உரிமைபெற்றிருப்பதாகவும், வேறு ஒரு கம்பெனி இவ்விதம் செய்வது தங்களின் வியாபாரத்துக்குக் குந்தகமாகுமென்றும் வாதிகள் கூறினார்கள். இது விஷயத்தில் ஜஸ்டிஸ் பக்லண்டு ஒரு மத்யஸ்தம் செய்தார். பிரதிவாதிகள் எல்லா ரிகார்டுகளையும் ஜப்பானுக்குத் திருப்பி அனுப்ப ஒப்புக்கொண்டதோடு, இனி அவற்றைத் தருவிப்பதில்லையென்றும் உறுதி கூறினார்கள்.

*　　*　　*

டிரேட் மார்க் சட்டமொன்று இயற்றுவது சம்பந்தமாய் வங்க தேசீய வர்த்தக சங்கத்தினர் சர்க்காருக்கு எழுதியிருக்கிறார்கள். 1877-ம் வருஷ முதல் இந்தப் பிரச்னை தீர்க்கப்படாமலிருக்கிறதென்ற விஷயம் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இச்சட்டம் கொண்டுவருவதைப் பல ஐரோப்பியர்கள் எதிர்த்தபோதிலும் ஷெப்பீல்ட் கட்லர் கம்பெனியார் இதையாதரித்து வந்திருக்கின்றனர். இத்தகைய சட்ட மேற்பட்டால் பல ஐரோப்பிய வர்த்தகர்கள் தங்கள் பொருள்களை மறுபடியும் ரிஜிஸ்தர் செய்யவேண்டி நேருமென்பதே ஆக்ஷேபணைக்குக் காரணம். இந்தியா சர்க்கார் இவ்விஷயத்தைக் கவனிக்கவேயில்லை. லங்காஷயர் நண்பர்களைத் திருப்தி செய்வதற்காக இந்திய சர்க்கார் இது விஷயத்தில் மௌனம் சாதிக்கின்றனர். இப்பிரச்னையை 1930-ம் வருஷம் சர். புருஷோத்தமதாஸ் தாகூர்தாஸ் இந்தியா சட்டசபையில் கிளப்பினார். ஆனால் ஸர் ஜார்ஜ் ரெயினி மழுப்பலான பதிலையளித்து வாளாவிருந்துவிட்டார். இந்திய வர்த்தகர்கள் இச்சட்டத்தை விரும்பவில்லையென்று சர்க்கார் கூறிவருகின்றனர். வாஸ்தவத்தில் அவர்கள் கலந்துகொள்ளுவதெல்லாம் ஐரோப்பிய வர்த்தக சங்கங்களைத்தான். மைசூர் வர்த்தக சங்கத்தாரும் வங்க தேசீய வர்த்தக சபையினரும் இப்பொழுது டிரேட் மார்க் சட்டம் அவசியமென்று கோர முன்வந்திருக்கின்றனர்.

உங்கள் டிரேட் மார்க்குகள், பெயர்கள், லேபில்களை,
பிறர் உபயோகித்து, உங்கள் லாபத்தை அடையாமலிருக்கும் பொருட்டு,
**கல்கத்தா ரிஜிஸ்தர்**
செய்து கொள்ளவும். முழுவிபரம் இனாம். விலாசம்:-ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்சி
9, சுண்ணாம்புக்காரத் தெருவு, பூக்குளத்திற்கு எதிரில், திருச்சினாப்பள்ளி.

## ஆறிலொருபங்கே கிஸ்தியாக வசூலிக்கவேண்டும்.

பஸ்ஸீனிலுள்ள செட்டியார்கள் சமுகத்தினர் பர்மா கவர்னருக்கு ஒரு மகஜரை அனுப்பியிருக்கின்றார்கள். அதில் அவர்கள் கூறுவதாவது:—நெல் வயல்களிலிருந்து வரும் வருமானத்தை நெல் மார்க்கெட்டின் நடை முதல் விலையை ஆதாரமாகக் கொண்டு நிதானிக்கவேண்டும். வயல்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் ஆறிலொருபங்கே கிஸ்தியாகவாங்கப்படவேண்டும். கிஸ்தி ரசீதுகளில் நிலச் சொந்தக்காரரது பெயரே குறிக்கப்படவேண்டும். வாரஞ் செலுத்கின்றவரது பெயரை அந்த ரசீதில் எழுதக்கூடாது ஒவ்வொரு வருஷமும் பிப்ரவரிமாத மத்தியில் கிஸ்தி செலுத்தப்படவேண்டுமென்று தற்போது விதி இருக்கிறது. இதற்குப் பதிலாக ஜூன் மாதக் கடைசியில் கிஸ்தி செலுத்தப்படவேண்டுமென்று விதி செய்யவேண்டும் நாங்கள் பஸ்ஸீன் நகரிலும் ஜில்லாவிலும் லேவாதேவி செய்து வருகின்றோம்.

சில சமயங்களில் எங்களிடம் அடகு வைத்த நிலங்களை நாங்களே எங்களுடைய பணத்திற்காக எடுத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகிறோம். 50 வருஷங்களில் எங்களிடம் எராளமாக நிலம் கிடைத்திருக்கிறது. இவை பெரிதும் நெல் விளையும் நிலங்களாகவே இருக்கின்றன. சென்ற 3 வருஷங்களில் நெல் விலை வெகுவாகக் குறைந்துபோய்விட்டது. இதனால் நிலங்களுக்குக் கிஸ்தி கட்டுவதற்கு வேண்டிய வருவாய்கூட எங்களுக்கு கிடைக்கவில்லை. பூமியின் சாரம் குறைந்துபோய்விட்டதால் மகசூலும் குறைந்து விட்டது. ஜனங்கள் அதிகமாக இல்லாததனால் தொழிலாளருடைய கூலி விகிதம் அதிகமாக இருக்கிறது. இதனால் நிலங்களுக்குக் கிராக்கி இல்லாமல் அவற்றில் பல தரிசாகக் கிடக்கின்றன. நிலச் சொந்தக்காரர்களுக்கு பெரு நஷ்டமேற்பட்டிருக்கிறது. சாகுபடி வேலை லாபகரமாக இல்லை. வரி செலுத்தாமல் நிலங்களைச் சர்க்கார் பறிமுதல் செய்து கொள்ளும்படி நிலச் சொந்தக்காரர்கள் பலர் விட்டிருக்கின்றார்கள்.

## வர்த்தகர்கள் முறையீடு

**வர்த்தக மகாசபைக் கூட்டம்:**—அதிராம் பட்டணம் யூனியன் சேர்மன் பங்களாவில் 7—12—33 மாலை 5 மணிக்கு தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் திரு. எ. பி. எல். என். வி. நாடிமுத்துப் பிள்ளை தலைமையில் கூடிற்று. இதற்கு சுமார் 700 வியாபாரிகள் கூடியிருந்தனர். பலர் தேங்காய் விலை இறங்கிவிட்டதாயும் முன்னமே தேங்காய் 1000 ரூ. 70 தான் இருந்தபோது எஸ். ஐ. ஆர். ரயில்வே சார்ஜ் மணங்கு 1-க்கு ரூ. 0—5—0வாக இருந்ததென்றும் இப்போது 1000-க்கு ரூ. 10 ஆக தேங்காய் விலையில் ரயில் சார்ஜ் அதிகமாக வாங்குகிறார்களென்றும் எம். எஸ். எம். ரயிலில் பாதி சார்ஜ் வாங்குகிறார்கள் என்றும் எஸ். ஐ. ஆர். கம்பெனியார் சார்ஜைக் குறைத்துத் தரவேண்டுமென்றும் உப்பு வியாபாரத்தில் குறைந்த ரேட்டு தூத்துக்குடியிலும் வேதாரண்யத்திலிருப்பதுபோல் இங்கும் செய்துதரவேண்டுமென்றும் கோரினார்கள். தலைவர் முகவுரை முடிவானபின் அடியில் கண்ட தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அதாவது தலைவர் கவர்ன்மெண்டுக்கும் ரயில்வே போர்டுக்கும் உப்பு மேலதிகாரிகளுக்கும் சிபார்சு செய்வதாய்ச் சொல்லி இவ்வூருக்கு கோவாபரேட்டிவ் கணக்கில் ரூ. 2 லக்ஷம் செலவில் ஒரு தேங்காய் எண்ணெய் மில் வைப்பதாயும் தீர்மானம் நிறைவேறி கூட்டம் 6-30க்கு இனிது கலைந்தது

# தமிழ் அன்பர் மகாநாடு

சென்னையில் டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற தமிழ் அன்பர் மகாநாட்டைத் திறந்து வைத்த டாக்டர் ராஜா ஸர். அண்ணாமலை செட்டியார் நிகழ்த்திய விரிவுரையின் சாராம்சம் பின்வருமாறு:—

பிற்காலத்துப் பெருவள்ளல்களில் ஒருவராகிய பச்சையப்ப முதலியார் கல்வி மண்டபத்தில், தமிழ் வளர்ச்சிக்காக இத்தமிழன்பர் மகாநாடு கூடுவது மிகப்பொருத்தமானது. நான் இம்மகாநாட்டைத் திறந்துவைப்பதற்கு இசைந்தது தாய்மொழித் தொண்டு செய்ய எனக்குச் சரியான சமயம் கிடைத்ததைவிடலாகாதென்பதே.

நம் தாய்மொழியாகிய தமிழ் மிசப் புராதனமானது. எவரும் வியக்கவல்ல ஆற்றல் வாய்ந்தது, நாகரிகம் படைத்தது, பல கலைகள் நிரம்பியது, விரிந்த நோக்குடையது. முடியுடை வேந்தர் மூவரும் செய்த மொழித்தொண்டுகள் கணக்கில. சங்கமிருந்து தமிழாராய்ந்தவர்கள் எத்தனையோ பெரும் புலவர்கள். சேதுபதிகள், ஜமீன்தார்கள், பிறவள்ளல்கள், மடாதிபதிகள், சைவசமயாச்சாரியர்கள், ஆழ்வார்கள், பௌத்த ஜைன சமயத்தவர் மகம்மதிய அறிஞர் கிருஸ்தவ அறிஞர் முதலிய எத்தனையோபேர் பல துறைகளிலும் நம் தமிழ் மொழியை ஆதரித்து வந்திருக்கிறார்கள்.

ஆங்கிலத் துரைத்தனத்தார் நம் தேசத்தை ஆளுகின்ற இந்நாளிலே நாகரிகம் நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. புதிய புதிய விஷயங்களெல்லாம் பிற பாஷைகளிலே தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. பிறநாடுகளெல்லாம் கல்வியில் அதிக விரைவாக முன்னேறி வருகின்றன. நாம் மாத்திரம் ஒன்றும் செய்யாமல் இருக்கிறோம். நமது தமிழ்மொழி புதிய புதிய துறைகளில் வளர்ச்சிபெற வேண்டாமா? பழம்பெருமை பேசியே காலத்தைப் போக்கிவிடுதல் நல்லதா? நமது மக்களுக்கு அறிவு பெருக வேண்டாமா? படிக்காதவர்களின் சங்கியை இன்னும் நமது நாட்டில் குறைந்தபாடில்லையே! இந்த விஷயம் எந்த அறிவாளியின் நெஞ்சத்தைத்தான் புண்ணாக்காது? தமிழ் தமிழ் என்று பேசிப் பேசி நாம் காலத்தை வீணாக்கினால், புதிய வழிகளில் இறங்கி நாம் எப்பொழுதான் உழைப்பது?

நண்பர்களே, இனித் தமிழின் தற்கால நிலைமையைப் பாருங்கள். அது மிகவும் கவலைக்கிடமாக இருக்கின்றது. ஆரம்பக்கல்வி, நடுத்தரக்கல்வி, உயர்தரக்கல்வி இம்மூன்றுக்கும் எத்தனையோ பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. தமிழுக்கும் தனியானகௌரவம் அளிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் அதன் அபிவிருத்தி அவ்வளவு சிலாகிக்கக்கூடியதாக இல்லை. இனி ஒருகால் அதற்கு நல்ல நிலை ஏற்படலாம். தமிழ் முன்னேற்றம் அடையாததற்கு ஆங்கில பாஷையும், துரைத்தனமுமே முக்கிய காரணமென்று சிலர் கூறலாம். அது உண்மையன்று. நாமே அதன் அபிவிருத்திக்குத் தடையாக நின்றோம் என்று சொல்வது பொருந்தும். எதற்கும் துரைத்தனத்தாரையே எதிர்பார்த்துச் சும்மா இருந்தால் ஒன்றும் நிறைவேறாது. நம்முடைய நோக்கம் இப்படியென்று அவர்கள் கண்டால் அல்லவோ, அதற்குத் தக்கபடி உதவி செய்ய முன் வருவார்கள்.

சிலர் நம் நாட்டுச் சிறுவர்களுக்கு, ஆங்கிலத்தில் ஓர் ஊக்கமும் உற்சாகமும் உண்டாவதுபோலத் தமிழில் உண்டாவதில்லையேயென்று கூறுகின்றார்கள். தமிழில் வசன நடைக்கு உறுதியான நிலை இன்னும் ஏற்படாதது வருந்தத்தக்கது. எளிய நடையில் இனிய சொற்களைக் கலந்து எவரும் எளிதில் அறியக்கூடிய தன்மையில் வேண்டுமென்பதை மனதிற்கொண்டு அவ்வாறு எழுதாமல், மனம்போனவாறெல்லாம் இழுத்துக்கொண்டு போகவிடுவது பாஷையின் உயர்வுக்கு நிச்சயமாய்த் தீமையைத் தரக்கூடியது.

நாம் பார்க்கின்ற, உணர்கின்ற, எண்ணுகின்ற அனுபவத்திற்கேற்றவைகளுக்குப் பொருத்தமான சொற்களையே நாம் எழுதும் நடையில் பிரயோகிக்க வேண்டும். கருத்தும் பேச்சும் ஒன்றையொன்றுவிட்டு என்றும் பிரிவதில்லை. நாம் இனி உண்டாக்க இருக்கும் புத்தகங்கள் உண்மையான வசன லட்சணங்கள் அமைந்து வெளி வருதல் நலம்.

நாட்டுமக்களுக்குக் காலத்திற்கேற்றபடி நல்லறிவு தரக்கூடிய நூல்களை மேல்நாட்டு அறிஞர்கள் தத்தம் மொழிகளில் பல்லாயிரக் கணக்காக எழுதி வைத்துள்ளார்கள். தினந்தோறும் புதிய புதிய நூல்கள் வெளி வந்துகொண்டேயிருக்கின்றன. அந்த நூல்களினின்று இப்பொழுது வேண்டிய நூல்களை நல்ல நடையில் மொழி பெயர்த்தால், மொழி பெயர்க்கும்போது சில சொற்களுக்குச் சரியான பிரதிபதம் நமது மொழியில் காணமுடியாது. சரியான சொற்கள் கிடைக்காவிட்டால், அதே சொற்களை உபயோகித்துவிடலாம். அதனால் பாஷைக்குக் குறைவென்று எவரும் கூறமுடியாது.


### 8-அணுவுக்கு 12-புஸ்தகம்

**"வர்த்தக ஊழியன்" மானேஜருக்கு அணா எட்டு அனுப்பினால் வர்த்தக ஊழியல் முந்தின பிரதிகள் 12 அனுப்பப் படும், உடனே எழுதவும்.**


தமிழன்பர்களே, அறிவு அனைவருக்கும்பொது. அது ஒருவர்க்கே உரியதன்று. அதனை ஆடவரும் பெறவேண்டும்; மகளிரும் பெறவேண்டும் ஏழையும் பெறவேண்டும், தனிகனும் பெறவேண்டும்; அதனைப் பெறுதற்கு மொழியன்றோ கருவி? அதனையல்லவா நாம் போற்றல் வேண்டும்? அதுவன்றோ தழைக்கவேண்டும்? இத்தகைய பெருமுயற்சியில வீணான மனத்தாங்கல்களுக்கு இடமேது? ஜாதி மதம் முதலியவற்றால் இவ்வியக்கம் விலக்கப்பட மாட்டாது. பேசிப் பேசிக் கழிந்த நாட்கள் எண்ணத் தொலையா. கழிந்தன கழிந்தனவே. அவற்றிற்காக வருந்தவும் வேண்டாம். எதிர்காலத்தில் நம்முடைய தாய்ப்பாஷை உன்னத ஸ்திதியை அடையுமென்பது நிச்சயம். இதற்கு ஒவ்வொருவரும் தம்மாலான உதவி புரிதல் அவசியமென்பதை நான் வற்புறுத்த வேண்டியதில்லை. ஊக்கமும் உற்சாகமும் உண்டாகிவிட்டால் அந்நற்காலம் அதிக சமீபத்திலேயே வந்துவிடும். தமிழ் முன்னேற்றம் தமிழர் முன்னேற்றத்தையே பொறுத்ததாகும்.

இம்மகாநாட்டின் சார்பாக நாம் எண்ணிய எண்ணம் நிறைவேற இறைவன் திருவருளை வேண்டி இதனை நான் திறந்து வைக்கின்றேன்.

(தமிழ் அன்பர் மகாநாடு)

## நிறைவேறிய தீர்மானங்கள்.

1. நவீன சாஸ்திர நூல்கள் தமிழில் எழுதப்பட்டு பள்ளிக்கூடங்களில் தமிழிலேயே கற்பிக்கப்படவேண்டுமென்று இம்மகாநாடு கருதுகிறது.

2. தமிழில் தக்க பதங்கள் இல்லாத விடத்து வழக்கத்திலுள்ள பதங்களை உபயோகித்தல் உசிதமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

3. பழந்தமிழ் நூல்கள் தகுந்த சிரத்தையுடன் படிக்கப்படவேண்டுமென்றும் அதில் தக்க எற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

4. தற்காலத்திய பள்ளிச்சிறுவர்களுக்கு எற்ற முறையில் பழந் தமிழ் நூல்களைத் தொகுத்தும் திரட்டியும் வெளியிடவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

5. தமிழில் பல் பொருள் விளக்க நூல் ஒன்று தயாரிக்கப்படவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

6. பள்ளிச் சிறுவர்களுக்காக எற்படுத்தப்படும் புத்தகஙகளில் நல்ல சித்திரப்படங்களிருத்தல் வேண்டுமென்றும் கல்வி போதிப்பதற்கான கருவிகள் உபயோகிக்கப்பட வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

7. ஜாதிமத வேற்றுமைகளை உண்டு பண்ணக்கூடிய நூல்கள் பள்ளிக்கூடங்களிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கிறது.

8. தமிழ் உயர்தனிச்சிறப்புடையது என்பதை யுணரும்படி செய்வதற்கான முறைகளைக் கையாளவேண்டுமென்றும், சர்க்கார் தமிழ்ப் பாஷைக்கு பிரதானியமளிக்கவேண்டுமென்றும் தமிழாசிரியர்களை மற்ற ஆசிரியர்களின் அந்தஸ்தில் வைக்கவேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

9. ஸ்தல ஸ்தாபனக் கூட்ட நடவடிகைகள் தமிழிலேயே நடத்தப்படுவது உசிதமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

10. கீர்த்தனங்கள் எழுதுதற்குத் தமிழும் தகுந்த பாஷையாதலால் சங்கீதக்கச்சேரிகளில் பெரும்பான்மையான பாடல்கள் தமிழிலேயே பாடப்பட வேண்டுமென்றும, அவ்வாறு செய்வதால் தமிழ்க் கீர்த்தனாசாரியர்களுக்கு ஊக்கமேற்படுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

## நாணய மாற்றம்.

Currency (31—12—33) பென்சு
பாங்ரேட் லண்டன் தந்தி 18
பாங்ரேட் லண்டன் தரிசனம் 18
லண்டன் தந்தி விற்கிறவிலை 18 1/32
தரிசன உண்டி விற்கிறவிலை 18 1/32

லண்டன்—அமெரிக்கா மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு டாலர் 5.11½

பாரிஸ் லண்டன் மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு பிராங்கு 83·38

பிரான்ஸ் மேல் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு பிராங்கு 605.

ஜர்மன் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு மார்க்கு 95.

அமெரிக்கா தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 270.

அமெரிக்கா தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 246.

சிங்கப்பூர் தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 158½.

சிங்கப்பூர் தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 150.

ஹாங்காங் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 99

ஷாங்காய் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 92

ஜப்பான் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை என் 100-க்கு ரூ. 85.

ஜப்பான் 2-மாததவணை உணடி வாங்குவது என் 100-க்கு ரூ. 100.

ஜாவா தந்தி அல்லது தரிசனஉண்டி விற்பனை ரூ. 100-ச்கு கில்டர் 58.

ஜாவா தந்தி அல்லது தரிசனஉண்டி வாங்குவது ரூ. 100-க்கு கில்டர் 100.

---

11. தமிழ் நாட்டில் வழங்கும் கதைகளையும் நாட்டில் வழங்கும் கதைகளையும் நாட்டுப்பாடல்களையும் திரட்டி ஒரு புத்தகமாக வெளியிடவேண்டுவதவசியமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது

12. எஸ். எஸ். எல். ஸி. (ஸ்கூல் பைனல்) வரையிலாவது எல்லாப்பாடங்களையும் (ஆங்கிலத்தைத் தவிர்த்து) கட்டாயமாகவே தமிழில்கற்றுக்கொடுத்துப் பரீக்ஷிக்கவேண்டுமென இம்மகாநாடு கருதுகிறது.

13. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள 216 எழுத்துக்களில் பல எழுத்துக்கள் உபயோகமற்றவையாயும் அச்சுக்கோப்பவர்களுக்கு வீண் சிரமத்தை உண்டு பண்ணுகின்றவையாயு மிருக்கின்றன. மேலும் சில சப்தங்களுக்குச் சரியான எழுத்துக்களுமில்லை. ஆதலால் வேண்டாத எழுத்துக்களைச் சேர்க்க வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

---

## பத்திரிகைகளின் வரவு.

(Exchange Journals.)

**Mysore Chamber of Commerce Bullettin.**
**London Chamber of Commerce Journal.**
Indian Finance
Industry
Guardian
Light of Asia
Indian Mirror
Indian Commerce
தேச நேசன்
நகர தூதன்
குமரன்
புரட்சி
குமார விகடன்
விநோதன்
வாசவி
செங்குந்தமித்ரன்
சுதந்தர வீரன்
இந்தியதாய்
பாரதஜோதி
அறிவுவிளக்கம்
பர்மா நாடு
குலாலமித்ரன்
குறும்பன்
விநோத நேசன்
வம்பன்

---

## உப்பு உற்பத்தி.

வட இந்தியாவில் உப்பு உற்பத்தி விற்பனை சம்பந்தமாக 1932-33ம் வருஷ யாதாஸ்து இப்போது வெளியாயிருக்கிறது அதன்படி உற்பத்தி 100-க்கு 6¼ வீதமும், விற்பனை 100-க்கு சுமார் 13 வீதமும் முந்திய வருஷத்தைவிடக் குறைந்திருக்கிறது. 1932-33ல் உற்பத்தியான உப்பு 120 லட்சம்மணங்கு; விற்பனை 108மணங்கு ஸாம்பார்எரி உப்பு எற்கனவே கையிருப்பில் அதிகமாயிருந்ததால் அங்கு குறைவாகஉற்பத்தி செய்யப்பட்டது. டிட்வர்ஞ எரி உப்புக்கு கிராக்கி குறைந்துவிட்டது. ஐக்கியவாகாணத்தில் உப்பு உற்பத்திக்கு வழி யிருக்கிறதாவென்று இவ்வருஷம் ஆராய்ந்து பார்த்ததில், மேற்படி ஆராய்ச்சியை இனி நடத்த வேண்டியதில்லையென்றும், அதில் பயனில்லையென்றும் முடிவு செய்யப்பட்டது பற்பல பாகங்களிலும் உப்பு பின்கண்ட விகிதப்படி சில்லரையாக விற்கப்பட்டது:—வடமேற்கு மாகாணத்தில் மணங்கு 1-க்கு விலை 2-6-8; பஞ்சாப் 2-10-11 டில்லி, 2-9-l, ஐக்கிய மாகாணம், 3-4-1, பீஹார் 3-6-11, மத்திய மாகாணம் 3-7-4, ராஜபுதனம் 2-8-9 மத்திய இந்தியா 2-11-11.

# இந்திய வர்த்தகம்.

(Indian Trade Statistics.)

## பம்பாய் (Bombay)

பம்பாய் மாகாணத்தில் அக்டோபர் மாத வர்த்தகம் இறக்குமதி 4·28 கோடி சென்ற வருடத்தைவிட 44·7 லட்சம் அதிகம். மெஷின்கள், மில்களுக்கு வேண்டிய சாமான்கள், பருத்தி சாயங்கள், கிரோசின் எண்ணை, மோட்டார்கார்கள், பட்டு நூல், ரப்பர் சாமான்கள் தேயிலை முதலிய சாமான்கள் அதிகமாகவும் தங்கம் 2·78 லட்சரூபாய்க்கும், வெள்ளி 13·43 லட்ச ரூபாய்க்கும் இறக்குமதி செய்யப்பட்டன. எற்றுமதி 1·85கோடி ரூபாய் சென்ற வருடத்தைவிட 34·24 லட்சம் அதிகம். விதைகள் தோல், கம்பளி அதிகமாகவும், தங்கம் 2 66 கோடியும் வெள்ளி ஒரு லட்சமும் எற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

எப்ரல் முதல் அக்டோபர் முடிய இறக்குமதி ரூ. 26,88,70 247 சென்ற வருடம் ரூ. 34,27,20,625 எற்றுமதி ரூ. 46,22,16,960 சென்ற வருடம் ரூ. 43,74,61,737.

* * *

## இந்திய வருமானம்

இந்தியாவிலிருந்து அக்டோபர் மாதத்தில் எற்றுமதி செய்யப்பட்ட சாமான்களின் கிரயம் தேசங்கள்வாரியாக— யுனைடெட் கிங்டம் ரூ. 453 லட்சம், மற்ற பிரிட்டிஷ் தேசங்கள் ரூ. 236 லட்சம். அமெரிக்கா 110 லட்சம், மற்ற நாடுகள் 89 லட்சம், பிரான்சு 61 லட்சம், ஜர்மனி 57 லட்சம், தென் அமெரிக்கா 53 லட்சம், இட்டாலி 51 லட்சம், எகிப்து 50 லட்சம், பெல்ஜியம் 39 லட்சம், ஆலண்டு தேசங்களுக்கு 31 லட்சம், ஜப்பான் 21 லட்சம், சைனா 10 லட்சம். இந்தியாவுக்கு சாமான்கள் அனுப்பிய தேசங்கள் —

யுனைடெட் கிங்டம் 424 லட்சம், மற்ற பிரிட்டிஷ் தேசங்கள் 85 லட்சம், ஜப்பான் 130 லட்சம், ஜர்மனி 87 லட்சம், அமெரிக்கா 62 லட்சம், பெல்ஜியம் 25 லட்சம், ஜாவா 14 லட்சம், இட்டாலி 47லட்சம், ஹாலண்டு தேசங்கள் 23 லட்சம், சைனா 21 லட்சம், பிரான்சு 16 லட்சம் மற்ற தேசங்கள் 128 லட்சம்,

இந்திய கவர்ன்மெண்டு வருமானம் கஸ்டம்சு மூலமாக 1933-34-ம் வருஷத்திற்கு எப்ரல் முதல் அக்டோபர் முடிய ரூபாய் 27,19,25,000 32-33ல் 29,64,08,000 31-32ல் ரூ. 24,57,51,000.

இந்தியா கவர்ன்மெண்டின் வருமானம் எப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் முடிய நிலவருமானம் ரூபாய் 16,19,14,000, உப்பு ரூ. 4,60,61,000, ஸ்டாம்பு ரூ. 6,86,76,000, எக்சயிஸ் ரூ. 8,02,57,000. கஸ்டம்சு ரூபாய் 27,19,25,000. இன்கம்டாக்சு ரூபாய் 6.49,67,000 காட்டு வருமானம் ரூபாய் 1,30,08,000, கஞ்சா ரூ. 59,18,000.

* * *

## கராச்சி (Karachi)

கராச்சி துறை முகத்தில் நவம்பர் மாதத்தில் இறக்குமதியான சாமான்களின் விலை ரூ. 1·16 கோடி எற்றுமதி ரூ. 69 லட்சம், சென்ற வருடத்தைவிட இறக்குமதியில் 38 லட்சமும் எற்றுமதியில் 3 லட்சமும் குறைவு. நவம்பர் மாதத்துடன் முடிவாகும் 8 மாதங்களின் கணக்கைப் பார்த்தால் இறக்குமதியால் 100-க்கு 25 வீதமும் எற்றுமதியில் 100-க்கு 13 வீதமும் குறைவென்று தெரிகிறது.

* * *

## சென்னை (Madras)

சென்னை மாகாணத்தில் நவம்பர் மாதத்தில் வர்த்தக நிலைமை:—

இறக்குமதி ரூபாய் 1,32,28,142; (1,22,14,966) எற்றுமதி ரூபாய் 1,94.34,740 (2,29,48,333) ஜர்மனியிலிருந்தும் நெட்டாலிலிருந்தும் சாய சரக்குகள் 2,53,955 ரூபாய்க்கும், பித்தளை முதலான சாமான்கள் ஜர்மனியிலிருந்து 205826 ரூபாய்க்கும், இங்கிலாந்திலிருந்து 288290 ரூபாய்க்கி இரும்பு எஃகு சாமான்களும் சுமத்ராவிலிருந்து 2,37,099 ரூபாய்க்கு கிரோசின் எண்ணையும், இறக்குமதி செய்யப்பட்டன. நார்வே தேசத்துக்கு 404841 ரூபாய்க்கு காப்பியும், பழங்கள் காய்கறிகள் அமெரிக்காவுக்கு 353093 ரூபாய்க்கும் அரிசி 202430 ரூபாய்க்கு இலங்கைக்கும், தோல் 10,77,478 ரூபாய்க்கு இங்கிலாந்துக்கும், புகையிலை 216319 ரூபாய்க்கு இங்கிலாந்துக்கும் எற்றுமதி செய்யப்பட்டன. ஆட்டுத்தோல், கடலை புண்ணாக்கு, ஆமணக்கு விதை, கடலை துணி, கருப்புதேயிலை மிகக்குறைவாக எற்றுமதி செய்யப்பட்டன. ஆமணக்கு விதை அமெரிக்காவுக்கு அனுப்பப்படவில்லை ஆட்டுத்தோல் சென்ற வருடம் நவம்பர் மாதம் 243 டன் அனுப்பப்பட்டது. இவ்வருடம் 247 டன், 4 டன் அதிகமாக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டபோதிலும் விலை சென்ற வருடம் ரூ. 1464324 . இவ்வருடம் ரூபாய் 12,57,741 இம்மாதத்தில் மினரல்ஆயில் சென்னை மாகாணத்தில் இறக்குமதி கிடையாது. சென்ற வருடம் இலங்கையிலிருந்து 1293 டன் கொப்பரை இறக்குமதியாயின இவ்வருடம் 683 டன் இதன் காரணமாக 176445 ரூ. சென்ற வருடத்தைவிட குறைவு இங்கிலாந்திலிருந்தும் ஜப்பானிலிருந்தும் பட்டு குறைவாகவே இரக்குமதி செய்யப்பட்டது சென்ற வருடம் ரூ. 4,39,163, இவ்வருடம் ரூ. 243963 நூல், ஜவுளிகள் இங்கிலாந்திலிருந்து இம்மாதம் குறைவாக இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது.

குறைந்த செலவில்
நிறைந்த லாபம் பெற விரும்பினால்
**வர்த்தக ஊழியனில்**
விளம்பரம் செய்யுங்கள்.

**சுத்த தங்கம்.**

விலை அதிகம். பாரிஸ் தங்கத்தை வாங்கி லாபமடையுங்கள். விலை மிகசகாயம் ஒரு அவுன்ஸ் ரூ. 6-0-0. இரண்டு அவுன்ஸ் (5-தோலா) ரூ. 10. 2½ ரூபாய் அனுப்பி மாதிரி வாங்கிப்பார்த்து பின் அதிகம் வாங்கவும். விலாசம்:—

அவுஸ் ஆப் காமர்ஸ், கௌகத்தி.

## அறிவிப்பு.

வர்த்தகம், கைத்தொழில் முதலானவைகளைப்பற்றி வியாசங்கள் பத்திராதிபருக்கு எழுதியனுப்பினால் பிரசுரிக்கப்படும். நல்ல வியாசங்களுக்கு தகுந்தாப்போல் சன்மானம் கொடுக்கப்படும். வர்த்தக ஊழியன் ஒரு பக்கத்திற்குள் அடங்கும்படியாக எழுதியனுப்பவும்.

# வர்த்தகத் துணுக்குகள்.

**Trade Titbits.**

மைசூர் சமஸ்தானத்தில் 1932-33ம் வருடத்தில் இன்கம்டாக்சுக்காக டிமாண்டு ரூ. 10·14 லட்சம். வசூலான தொகை ரூ. 9.60 லட்சம் சூபர் டாக்சுபாக்கியுள்பட டிமாண்டு ரூ. 3·08 லட்சம். வசூலானது ரூ. 3·04 லட்சம்.

* * *

1934-ளு ஜனவரி மாதம் 31வ யிலிருந்து, 1924-ளு அக்டோபர்மாதம் 11-வ யிட்டு வெளியிடப்பட்ட ஜர்மன் 10 மார்க்கு நோட்டுகள் செல்லுபடியாகாதென்றும் அவைகளை 1934-ளு பிப்ரவரி மாதம் 28-வக்குள் கையிருப்பிலிருக்கும் நோட்டுகளை உடனே மாற்றிக்கொள்ள வேண்டுமென்றும் ஜர்மன் கான்ஸல் உத்திரவு போட்டிருக்கின்றார்.

* * *

இங்கிலாந்து வர்த்தகம் இப்பொழுது அபிவிருத்தியடைந்து வருகிறது. நவம்பர் மாதத்தில் இறக்குமதி 63,734,000 பவுன் ஏற்றுமதி 34,434,000 பவுன் அக்டோபர் மாதத்தைவிட 1963000 பவுன் இறக்குமதியிலும் 3,03,000 பவுன் ஏற்றுமதியிலும் அதிகம். ஜனவரி மாதத்தில் இரும்பு 26000 டன் உற்பத்தி செய்யப்பட்டது. அக்டோபர் மாதத்தில் 3,73,000 டன் ஸ்டீல் அக்டோபர் மாதத்தில் 668000 டன் ஜனவரி மாதத்தில் 444000 டன்.

* * *.

1931-ளுத்தோடு முடிவாகும் 32 வருடங்களில் இந்தியாவிலிருந்து ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்த சாமான்களின் விலை ரூ. 7,609,000,000 ஆனால் ஜப்பானிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு இறக்குமதி செய்த சாமான்களின் கிரயம் ரூ. 3,347,000,000.

* * *

ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் முடிய 38,17,000 அவுன்சு தங்கம் (விலை 3161 லட்சம்) ஏற்றுமதி செய்யப்பட்டது. சென்ற வருடம் இதே காலத்தில் 46,32,000 அவுன்சு (விலை 3533 லட்சம்)

* * *

ஜப்பானுடன் வர்த்தக ஒப்பந்தம் இல்லாத தேசங்களின் இறக்குமதிகள் மீதும், ஜப்பான் சாமான்கள் வெளி தேசங்களில் அதிகமாக விற்காதபடித் தடை செய்துவரும் தேசங்களின் சாமான்கள்மீதும் கனத்த இறக்குமதி வரி விதிக்க ஒரு மசோதா பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பரஸ்பரம் அனுகூலமானமுறையில் எல்லாத் தேசங்களுடனும் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொள்ள ஜப்பான் தயாராயிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

* * *

நவம்பர் மாதம் 29வயோடு முடிவான வாரத்தில் இங்கிலாந்தில் 190,638,373 பவுன் விலை மதிப்புள்ள தங்கம் ரிசர்விலிருந்தன இங்கிலாந்தில் நவம்பர்மீ 27வ முதல் டிசம்பர்மீ 4வ வரையில் 6,586,672 பவுன் தங்கம் இறக்குமதி செய்யப்பட்டது. 33,181 பவுன் தங்கம் ஏற்றுமதிசெய்யப்பட்டது. பிரான்சிலிருந்து 3,476,714 பவுனும், இந்தியாவிலிருந்து 1,129,621 பவுனும் இறக்குமதி செய்யப்பட்டது. ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து டிசம்பர் மாதம் 16வ வரையில் 35,41,63,000 ரூபாய் தங்கம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

* * *

இதர தேசங்களுடன் பிரிட்டனுக்குள்ள வியாபார சம்பந்தத்தைப்பற்றி பொக்கிஷ மந்திரி மிஸ்டர் நெவில் சேம்பர்லேன் சமீபத்தில் பர்மிங்ஹாமில் பேசுகையில், பிரிட்டிஷ் சாமான்கள் மீது சில தேசங்கள் விசேஷ வரிகள் போடுவதாலும், வேறு சில நாடுகள் கப்பல் கம்பெனிகளுக்கு உதவி செய்து வருவதாலும், பிரிட்டிஷ் வர்த்தகம் மிகவும் பாதிக்கப்படுகிறதென்றும், ஆகையால், இத்தகைய பாரபட்சமான நடவடிக்கைகளிலிருந்து தற்காப்புச் செய்துகொள்ள பிரிட்டன் உத்தேசித்திருக்கிறதென்றும், இதுவரை சில நிர்ப்பந்தங்கள் இருந்து வந்ததால், பிரிட்டன் நிலைமை சிரமமாயிருந்ததென்றும் இனி அந்நிர்ப்பந்தஙகள் ஒழிந்துபோனதால் பிரிட்டன் தற்காப்பு முறைகளைக் கையாளத் தீர்மானித்திருப்பதாகவும், பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிகளுடன் பிறதேசப் போட்டி கடுமையாயிருப்பதாகவும் சொன்னார்.

* * *

அமெரிக்காவில் 100 டாலர் மதிப்புள்ள தங்கத்துக்குமேல் ஒருவரும் வைத்திருக்கக்கூடாதென்றும், உடனே கஜானாவில் கட்டிவிடவேண்டுமென்றும் சமீபத்தில் உத்திரவு பிறப்பித்திருக்கின்றார்கள்.

* * *

## மகாத்மாவின் வேண்டுகோள்.

தோல் தொழில் இருக்கிறது. ஹரிஜனங்கள் வேலை செய்யாவிடில் முக்கியமாக ஆரம்பநிலையிலாவது வேலைசெய்யாவிடில் இந்தியாவில் தோல் தொழிலே இருக்குமிடம் தெரியாது. இத்தொழிலைப்பற்றி நான் அதிகம் கூறுமாறு நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்களென நம்புகிறேன். ரூபாய் கணக்கில் 9 கோடி ரூபாய்க்கு மேல் மாட்டுத்தோல் இந்தியாவை விட்டு வெளிப்போகிறது. நாம் ஹரிஜனங்களுக்குச் சாதகமாகவிருந்து அவர்கள் நன்மையைத் தேடுவதாயின் இந்தத் தோல் இந்தியாவிலேயே உபயோகப்படுமாறு செய்யவேண்டும் முற்றிலும் பதனிடாததாகவாவது இத்தேசத்தை விட்டுச் செல்லாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

## ரயில்வே கேஸ்

ஜம்னாதாஸ் ராம்தாஸ் என்பவர் டில்லியிலிருக்கும் (E.I.Ry.) சுப்ஜி மண்டி ஸ்டேஷனிலிருந்து ஜெய்சண்டு பஹார் ஸ்டேஷனுக்கு (B.N.K.,)·அனுப்பிய சாமான்கள் மழையினால் நனைந்து சேதமடைந்த காரணத்தைக்கொண்டு ரூ. 199-12-0 நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று ரகுநாதபூர் ஸ்மால் காஸ் கோர்ட்டில் பிராது செய்திருந்தார்: மனு தள்ளுபடி செய்யப்பட்டதின்மேல் பாட்னா ஹைகோர்ட்டில் அப்பீல்செய்து கொண்டதில் பி. என் ரயில்வே நஷ்ட ஈட்டையும் செலவு தொகையையும் கொடுக்கும்படிக்கும் கிழக்கு இந்திய ரயில்வேக்கு இரண்டு மொகர் செலவு தொகை கொடுக்கும்படிக்கும் தீர்ப்பு சொல்லப்பட்டது.

## தான்ய நிலைமை
## (Crop Reports)

நேல்.

நவம்பர் மாதம் 25 தேதி வரையில் 10,491000 எக்கர் நெல் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது சென்ற வருடம் 10,312,000 எக்கர். விசாகபட்டணம், அனந்தபூர், கடப்பை, சேலம், கோயம்புத்தூர் திருச்சினப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, நீலகிரி, மலபார் முதலானஜில்லாக்களில் அதிகமான எக்கர் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. மாகாண முழுதும் முதல் அறுவடையாகிவிட்டது. நவம்பர் மாதக் கடைசியில் மணங்கு ஒன்றுக்கு இந்தியாவில் ரூ. 2-14-0, கடப்பை நெல்லூரில் ரூ. 2-2-0, வேலூர், திருநெல்வேலியில் ரூ. 2-0-0, மற்ற ஜில்லாக்களில் ரூபாய் 1-7-0 முதல் ரூ, 1-14-0 வரையில் விற்றது.

பருத்தி

சென்னை மாகாணத்தில் நவம்பர்-மீ 25 தேதி வரையில் 1,762,300 எக்கர் பருத்தி சாகுபடிசெய்யப்பட்டிருக்கிறது சென்றவருடத்தைவிட 100க்கு 2வீதம் அதிகம். நவம்பர் மாதத்தில் விலை மணங்கு ஒன்றுக்கு காக்கினடா ரூபாய் 15-3,ரெட்.நார்தர்ன்சு ரூ.15-10. வெள் நார்தர்ன்சு ரூ. 16-8-0, வெஸ்டர்ன்சு ரூ. 14-1-0, கம்போடியா ரூ. 22-4-0, கோயம்புத்தூர் கருங்கண்ணி ரூபாய் 20-14-0 திருநெல்வேலி கருங்கண்ணி ரூ. 19-3-0. நாடன் ரூ. 17-0-0.

அரிசி

பம்பாய் மாகாணத்தில் சமீபத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி 3,134,000 எக்கர் நிலங்கள் நெல் சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றது. பம்பாய் மாகாணத்தில் 16,800,000 அந்தரும் சமஸ்தானங்களில் 1 919,000 அந்தரும் எதிர் பார்க்கப்படுகிறது.

* * *

டிசம்பர் மாத கடைசியில் கொச்சி மார்க்கட்டில் எண்ணை விலையில் யாதொரு மாறுதல் கிடையாது. கொப்பரை, புண்ணுக்கு விலை கொஞ்சம் குறைவு தேங்காய் நாறுக்கு அதிக கிராக்கியில்லை மிளகு, இஞ்சி, மஞ்சல் வாங்குபவர்கள் வெகு சிலரே. நெல், அரிசி கொஞ்சம் அதிகம்.

* * *

சமீபத்தில் எற்பட்ட மலைச் சரிவின் காரணமாக எற்காடுகாட்ரோடு போக்குவரத்துக்கு சாதகமில்லையென்று மூடப்பட்டுவிட்டதினால் சேர்வராய் மலையிலிருந்து காப்பிக்கொட்டைகள் வர இயலாத நிலைமையிலிருக்கிறது. இதன் காரணமாக எல்லா சாமான்களின் விலைகள் மணங்குக்கு ஒரு ரூபாய் வீதம் உயர்ந்துவிட்டது. ரோட் செப்பனிட்டு நல்ல நிலைமைக்கு வர சுமார் ஒருமாத காலம் செல்லுமென்றும் அதுவரையில் காப்பிக்கொட்டை மலையிலிருந்து தருவிக்கமுடியாதென்றும் தெரிகிறது.

* * *

டிசம்பர் மாதக்கடைசியில் பெரியகுளம் தேனீமார்க்கட்டில் தான்யங்கள் விலை குறைந்திருந்தும் ஜனங்களிடம் வாங்கப் பணமில்லாமல் வருந்துகிறார்கள். இப்பொழுது நிலக்கடலை காலமாகையால் இந்த மார்க்கட்டில் வண்டி வண்டியாக நிறைந்திருக்கின்றன. எராளமாக வாங்குபவர்களுக்கு நல்ல சமயம்.

## கப்பல் செய்தி.
## (Shipping News.)

சென்னை துறைமுகத்தில் ஜனவரி மாதத்தில் எதிர்பார்க்கப்படும் கப்பல்களின் பெயர்களும் தேதிகளும்:—மகராண்டா 1, லக்ஷ்மி, ரஜுலா, யூகன் பெல்சு, டுமானு 2, ஐராவதி 5, ஜீன்ல போர்டி 6, மசோபிரா 7, கிளான்மகனுப் 12 ரோஹனு, மகாராஜா, மஹாத், சிட்டி ஆப் பிளாரன்சு 13, லாகூர், யோமாசீச்சீ, சிட்டி ஆப் எல்வூட் 15, கிளான்மாரிசன் 16, அல்டன் பெல்சு, தாலட்டா 19, ஆஸ்திரேலியா 22, சான்டிட்லி, 23, ஸ்பிரிங் பாங்கு 25, கிளான் மக்னெயிர் 26, ரஜுலா, மெடியா 27, மசோபரா 30.

## "வர்த்தக ஊழியன்"
## (முதல் வருட புத்தகம்)

வர்த்தக ஊழியன் முதல் வருட 12 இதழ்களும் சேர்ந்து பைண்டு செய்து புஸ்தகரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. வேண்டுபவர்கள் ஒரு ரூபாயும் போஸ்டேஜ் சார்ஜ் அணு நான்கு மானேஜருக்கு அனுப்பினால் பைண்டு செய்த புஸ்தகம் அனுப்பப்படும். சொற்ப காப்பிகளே பைண்டு செய்திருப்பதால் உடனே எழுதி தருவித்துக் கொள்ளவும்.

மானேஜர் "வர்த்தக ஊழியன்"
திருச்சினப்பள்ளி,


## விளம்பரம்.

**நீலகிரி மலையிலிருந்து திருச்சினப்பள்ளிக்கு காய்கறிகள், பழங்கள் முதலான சாமான்களை அனுப்ப குறைந்த சார்ஜ்.**

1933ளு டிசம்பர் மாதம் 15உயிலிருந்து உதகமண்டலம், குன்னூர், வில்லிங்டன் ஸ்டேஷன் களிலிருந்து திருச்சினப்பள்ளி கோட்டை அல்லது திருச்சினப்பள்ளி ஜங்ஷன் ஸ்டேஷனுக்கு மேட்டுப்பாளையம், ஈரோடு மார்க்கமாக அனுப்பப்படும், புதிய பழங்கள், காய்கறிகள் உருளைக்கிழங்கு சாமான்களுக்கு பாதி பார்சல் ரேட் சார்ஜ் செய்யாமல் சொந்த பொறுப்பில் (Owners Risk Form B or H) அனுப்பப்படும்,பார்சல்களுக்கு, மணங்கு ஒன்றுக்கு ரூ. 1-3-0 வீதம் ஒரே விதமான ரேட் விதிக்கப்படும். இந்த பார்சல்கள் நீலகிரி ரயில்வேயில் மிக்செட் டிரெயினிலும் மற்ற இடங்களில் பாசஞ்சர் டிரெயினிலும் அனுப்பப்படும். சார்ஜ் முன்னால் கட்டிவிடவேண்டும் ஒரு மணங்குக்கு குறைந்திருந்தாலும் ஒரு மணங்குக்கு குறையாமல் சார்ஜ் செய்யப்படும்.

**தென்னிந்திய ரயில்வே கம்பெனி,
லிமிடெட்.**

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.

## ஏஜண்டுகள் தேவை.

"வர்த்தக ஊழியன்" பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், விற்கவும், விளம்பரங்கள் சேகரிக்கவும் செல்வாக்குள்ள ஏஜண்டுகள் முக்கிய பட்டணங்களில் தேவை.

**மானேஜர் "வர்த்தக ஊழியன்"**
திருச்சினப்பள்ளி.

## தங்கம் இனும்.

தங்கம் செய்யும் விதம் ரூ. 2-8-0க்கு அனுப்பப்படும். உடனே ஆர்டர்செய்கிறவர்களுக்கு அரை தோலா தங்கம் இனுமாக அனுப்பப்படும். விலாசம்:—

**அவுஸ் ஆப் காமர்ஸ், கௌகத்தி,**
(ஆங்கிலத்தில் எழுதவும்)

# "Varthaga Oolian"

**(MONTHLY JOURNAL OF COMMERCE, TRADE AND INDUSTRY.)**

**Independent Journal with trenchant views.**

Gives hundreds of practical ideas of money making.

The best journal in South India for the earnest, purposeful and ambitious businessmen.

Every one engaged in business should read "Varthaga Oolian."

**Best medium for businessmen to advertise.**

***Annual subscription Re. one only.***

**Apply to :—**

**The Manager,**

**"Varthaga Oolian"**

**TRICHINOPOLY, South India.**



டாக்டர் கோட்டா

# ஜெயராம் நாயுடு,

(வைத்திய பூபதி)

மேகவியாதி சிகிச்சையில் தேர்ந்தவர்.

இவரால் குஷ்டம், மேகப்பற்றுகள், இரணங்கள், மூர்ச்சை, க்ஷயம், இரைப்பு, காசம், வீர்யநஷ்டம், கீல்வாதம், மூலவியாதி, அண்டவாதம் குழந்தைகள் ஸ்திரீகளின் வியாதிகள் முதலான தீராத எவ்வித கடின வியாதிகளையும் ஆயிரக்கணக்காக ஸ்வஸ்தப்படுத்தி அநேக நற்சாக்ஷிப்பத்திரங்களைப் பரிசுவாங்கி இருப்பவர். கேட்லாக்கு அனுப்பப்படும். இலவசமாக ஆலோசனை செய்யப்படும்.

வேண்டிய மருந்துகளை வி. பி. மூலமாக அனுப்பி வியாதியை நிவர்த்திப்பார்.

விலாசம்:—நெ. **146** பிராட்வே, மதராஸ்.

WANTED—Agents and Salesmen to sell our renowned Dr. Kotah's Herbal Glycerine and Hazel Snow, Family Medicine Chests, Sthambhana Vati, Sanjeevi Mattra, Chyavanaprash, Raja Rasam etc., on liberal commission.

Apply to:-Dr. Kotah's M. S. Medical Hall. 146, Broadway, Madras.



## நீங்கள் அறிவீர்களா?

சென்ற 53 வருஷங்களாக இந்தியா, பர்மா, சிலோன், ஸ்டெரெயிட் செட்டில்மெண்ட், ஆப்ரிக்கா முதலிய நாடுகளில் இலட்சக்கணக்கான ஜனங்களுக்கு குணமென்னும் பாக்கியத்தைக் கொடுக்கும் பலவிருத்தி ஔஷதம்

— எங்களுடைய —

## ஆதங்க நிக்ரஹ மாத்திரை

களென்று நீங்கள் அறிவீர்களா? மலச்சிக்கல், பசியின்மை, தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி, முதலிய வியாதிகளை காஸ்தமாகக் கண்டித்து தேகத்தை வஜ்ர சரீரமாக்கும்.

**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1**

இனாம்! இனாம்!!

"இன்பவாழ்க்கையிலடைந்த சக்தி"

கேட்போருக்கு இனாமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26. பிராட்வே, மதராஸ்.

ஏஜண்டு:—T. G. கோபால் பிள்ளை,

மலைவாசல், தெப்பக்குளம், திருச்சி.



# வர்த்தக நண்பர்களே!



உங்கள்

வர்த்தகம் விருத்தியடைந்து நீங்கள் லாபமடைய விரும்பினால்

"வர்த்தக ஊழியனில்"

**விளம்பரம் செய்யுங்கள்.**

# T. R. RANGASAWMY NAIDU,

## PAINT & GLASS MERCHANT,

## 341 & 342, Big Bazaar Street, TRICHINOPOLY.




**All sorts of Paints, Varnishes, Colours, Enamels, etc., manufactured by well known firms & British and other make**

Looking glasses, Ceiling glasses, Colour glasses and Ornamental glasses etc.

Raja Ravi Varma pictures, British & German lady pictures sceneries, Postcard pictures, frames, Tin Plates etc.

Straw boards, Colour papers, Glass beads, Gold & Silver leaves, Copper foils, etc., for ornamenting Pandals.

Can be had at cheap rates.

New Year Calendars are available for sale.

ஸ்ரீ ஸ்ரீ



# ஆபரணக்கற்களில் பெயர் பெற்றவை எங்கள்

## ஓரிஜினல் ரங்கூன் டைமண்ட்ஸ்



Registered Trade Mark.

## ஓரிஜினல் ரங்கூன் வைரங்கள்.

(Registered Trade Name)

## எல்லா நகைகளுக்கும் உபயோகமானவை

உண்மை வைரங்களைப்போல் பட்டையுள்ளதும் ரவுண்டு சுத்தமுள்ளதும், பிரகாசிப்பதும், வெண்மையுள்ளதும், காந்தி வீசுவதும், தேய்வு ஏற்படாததும், எல்லாவிதத்திலும் வைரத்தை ஒத்திருப்பதும் எங்கள் ரிஜிஸ்டார்டு "ஓரிஜினல் ரெங்கூன் வைரங்களே"

ஏழைகள் முதல் தனவந்தர்கள் வரையில் வாங்கலாம். ஒருதரம் வரவழைத்து உண்மையை அறியுங்கள். உத்திரவாதம் உள்ளவை. மாதிரி கமலத்திற்கு எழுதுங்கள், பிடிக்காவிட்டால் ரூபாய் வாபஸ் அனுப்புகிறோம்.

இமிடேஷன் பட்டை சிகப்பு, குச்சை சிகப்பு, தளுக்குப் படிக்கம், கெமிகல் டையமன் இன்னும் பலவித நூதன கற்களும், நகைகளும் நயமாய்க் கிடைக்கும்.

**S. அருணாசலம் செட்டி, M. ராமசாமி செட்டி,**

ஷராப் வியாபாரம், பெரியகடைவீதி, திருச்சினாப்பள்ளி.

# வைகுண்ட ஏகாதசிக்கு

# ஸ்ரீரங்கம்

## விஜயம் செய்யுங்கள்.

---

## 17-12-1933 முதல் – –
## – – – 6-1-34 வரை

---

| | |
|---|---|
| மோஹினி அலங்காரம் | **26-12-33** |
| வைகுண்ட ஏகாதசி | **27-12-33** |
| கைதல சேவை | **2-1-34** |
| ஆழ்வார் மோக்ஷம் | **6-1-34** |

தென்னிந்திய ரெயில்வே கம்பெனி

லிமிடெட்.,

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

# இந்தியா கவர்ன்மெண்ட் போஸ்டாபீஸ்

# = காஷ் =

# ஸர்ட்டிபிகேட்டுகள்.

**ரூ. 8-4-0க்கு ரூ. 10, 5-வருஷத்தில் கிடைக்கும்.**

# வருமான வரியின்றி

**100-க்கு 4 விகிதம்.** வட்டிக்கு வட்டி தரும்.

தேவையானல் ஒருவருஷத்திற்குப் பிறகு வட்டி யுடன் ரொக்கமாகத் திருப்பிக் கொடுக்கப்படும்.

## ஒருவர் ரூபா 10,000-வரைக்கும்

ஸர்ட்டிபிகேட்டுகள் பெறலாம்.

# காஷ் ஸர்ட்டிபிகேட்

எடுத்துக்கொள்ள, பிரதி மாதமும் ஒரு தொகையை மிச்சப்படுத்தி தனியாக வையுங்கள்.

1933-௵ ஜூன்-மாதம் 1-ந் தேதியன்ரே அதற்குப்பிறகோ இப்பொழுதுள்ள வட்டிவிகிதம் மாற்றப்படக்கூடியதற்கு முந்தி 5-வருஷகாலம் முடிந்து ரொக்கத்தைப் பெற்றுக் கொள்ளத் தகுதியடையக்கூடிய ரொக்க ஸர்ட்டிபிகேட்டுகளை உடையவர்கள் இஷ்டப்படின், மறுபடியும் ஐந்து வருஷகாலம், வட்டிக்கு அத்தொகைகளைப் போட்டுவைத்திருக்கலாம். ரூ 10-மதிப்புள்ள அவ்வகை காஷ் ஸர்ட்டிபிகேட்டுக்கு ஐந்துவருஷத்தில் ரூ. 12-4-0 கிடைக்கும்.

போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் தமது கணக்கிலுள்ள பணத்தைக்கொண்டு காஷ் ஸர்ட்டிபிகேட்டுகள் வாங்க விரும்பும் சேவிங்ஸ் பாங்கி டிபாசிட்டர்கள், சேவிங்ஸ் பாங்கியிலிருந்து பணத்தை வாங்கி மீண்டும் தபாலாபீஸில் கட்டவேண்டியதில்லை; ஸர்ட்டிபிகேட்டை வாங்குவதற்கான தமது விண்ணப்பத்துடன் பாஸ் புஸ்தகத்தையும், அதனுடன் பணத்தை திரும்பி வாங்குவதற்கான விண்ணப்பத்தில் கையொப்பமிட்டு அதையும் ஆஜர் செய்தால் போதுமானது.

**எல்லா தபாலாபீஸ்களிலும் இதைப்பற்றிய விவரங்கள் கிடைக்கும்.**


Printed at the Sri Nilayam Press, Trichinopoly. Edited and published by T. V. K. Naidu at the office of "Varthaga Ooliau" S. V. S. Building, Big Bazaar St, Trichinopoly, South India.